# நக்கல் நமசிவாயம்




Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 323 பிலவ வருடம், ஆவணி மாதம் 22ஆம் திகதி வியாழக்கிழமை (09.09.2021) ஹிஜ்ரி - 1443, முஹர்ரம் பிறை - 30, 0115886187 - பக்கங்கள் 09

'தமிழன்' மின்னிதழ் பதிப்பு e-Paper

## சுற்றுலாப் பயணிகள் 5,040 பேர் ஓகஸ்டில் நாட்டுக்கு!

இலங்கைக்கு ஓகஸ்ட் மாதத்தில் 5 ஆயிரத்து 40 சுற்றுலாப் பயணிகள் வருகைதந்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

2021 ஆம் ஆண்டில் கடந்த மூன்று மாதங்களுடன் ஒப்பிடுகையில் ஓகஸ்டில் அதிக எண்ணிக்கையிலானோர் வருகைதந்துள்ளனர். மே மாதம் ஆயிரத்து 497 பேரும் ஜூன் மாதம் ஆயிரத்து 614 பேரும் ஜூலையில் இரண்டாயிரத்து 429 பேரும்...

02

## இலங்கையில் சீனாவின் ஆதிக்கம்

# அமெரிக்க உளவுத்துறை தலைவர் இந்தியாவில் முக்கிய ஆராய்வு!

## அஜித் டோவலுடன் நீண்டநேர சந்திப்பு



(நமது விசேட செய்தியாளர்)

இந்திய தலைநகர் புதுடில்லிக்கு முக்கியமான பயணமொன்றை மேற்கொண்டுள்ள அமெரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏயின் தலைவர் வில்லியம் பேர்ன்ஸ், இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலுடன் நீண்ட ஆலோசனை நடத்தியுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்களினூடாக அறியமுடிந்தது.

இந்தச் சந்திப்பு தொடர்பாக உத்தியோகபூர்வ விவரங்கள் வெளியிடப்படவில்லை. இருப்பினும், ஆப்கானை தலிபான்கள் கைப்பற்றிய சூழ்நிலையில் பாதுகாப்பு விவகாரங்கள், தெற்காசிய பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கம், இலங்கையில் சீனாவின் அதிக பட்ச ஆக்கிரமிப்பு என்பன குறித்து இந்த சந்திப்பில் ஆலோசனை நடத்தப்பட்டதாக அறியமுடிகின்றது.

முன்னதாக, ரஷ்ய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நிகோலய் பத்ருஷேவை அஜித் டோவல் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பின்போது ஆப்கான் அரசியல் சூழ்நிலை, சீனா மற்றும் பாகிஸ்தான் விவகாரங்கள் குறித்தும், ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் சீன முதலீடுகள், சீன இராணுவத்தினர் இலங்கையில் திட்டப்பணிகளுக்காக வருகை தந்தமை, இலங்கையின் வடக்கு மாகாணத்தில் சீனாவின் முதலீட்டு திட்டங்கள் போன்றவைகளால் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள தாக்கம், பிராந்தியத்தில் சீனாவால் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் குறித்து இங்கு விரிவாக ஆராயப்பட்டதாக இராஜதந்திர தகவல்கள் மேலும் தெரிவித்தன.



## நோயாளர்களில் 50 வீதமானோருக்கு ஒட்சிசன் தேவை

(யோ.தர்மராஜ்)

நாட்டில் அடையாளம் காணப்படும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் 50 வீதமானோருக்கு ஒட்சிசன் தேவை ஏற்பட்டுள்ளது. நாளுக்கு நாள் நோயாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டாலும் ஒட்சிசன் தேவை ஏற்படுவோரில் வீழ்ச்சி ஏற்படவில்லை - என கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் குமார விக்ரமசிங்க தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 3 ஆயிரத்து 250 படுக்கைகள் இருக்கின்றன. அதில் 750இற்கு மேற்பட்ட படுக்கைகள் கொரோனா நோயாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. நாளுக்கு நாள் அதிகரித்த நோயாளர்களின் எண்ணிக்கைக்கேற்ப படுக்கைகளை ஒழுங்குசெய்து நோயாளர்களை படுக்கைகளில் வைத்து சிகிச்சையளிப்பதற்கு முடியுமாக இருந்தது. மேலும் படுக்கைகள் தேவைப்பட்டால் 180 படுக்கைகளை ஒழுங்குசெய்வதற்கு முடியும்.

செப்டெம்பர்முதல் நோயாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டது. அதன்படி, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 349 பேர் மாத்திரமே இருந்தனர்.

02

## கப்ரால் பதவி விலகினால் கெட்டகொடவின் பெயர் பரிசீலனை

(யோ.தர்மராஜ்)

நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் அமைச்சு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகினால் ஏற்படும் வெற்றிடத்திற்கு முன்னாள் தேசிய பட்டியல் உறுப்பினர் ஜயந்த கெட்டகொட நியமிக்கப்படுவார் என அரச வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய நிதி இராஜாங்க அமைச்சராகவுள்ள அஜித் நிவார்ட் கப்ரால் மீண்டும் மத்திய வங்கி ஆளுநராக பதவியேற்கவுள்ளதாகவும் இதனால் அவருடைய அமைச்சு மற்றும் நாடாளுமன்ற பதவியையும் இராஜிநாமா செய்யவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில், அவர் பதவி விலகும் பட்சத்தில் வெற்றிடம் ஏற்படும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு முன்னாள் தேசியப் பட்டியல் உறுப்பினர் ஜயந்த கெட்டகொட நியமிக்கப்படவுள்ளதாக அறியமுடிந்தது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப்பட்டியல் உறுப்பினராக நியமிக்கப்பட்டிருந்த ஜயந்த கெட்டகொட, பெசில் ராஜபக்ஷ நாடாளுமன்றம் வருவதற்காக தன்னுடைய பதவியை இராஜிநாமா செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



மொரட்டுவை சாத்தரகந்த பகுதியில் தயாரிக்கப்பட்ட சவப்பெட்டிகள் வீதியில் வைக்கப்படுவதை படத்தில் காணலாம்.

(படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன)

## சர்வதேசத்தையும் பாப்பரசரையும் ஏமாற்றும் முயற்சியில் அரசாங்கம்

### கீழ்த்தரமான செயலென பேராயர் கடும் விசனம்



(யோ.தர்மராஜ்)

உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக பொய்யான தகவல்களைக் கூறி சர்வதேசத்தையும் பாப்பரசரையும் ஏமாற்றுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. எங்களை ஏமாற்றி சர்வதேசத்தையும் ஏமாற்றுவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமாக இருந்தால் அதற்கு நாங்கள் ...

02

## துண்டாடப்பட்ட கையை மீளப் பொருத்தி யாழ்ப்பாண மருத்துவர்கள் சாதனை



கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்தவேளையில் தவறி விழுந்து படகின் காற்றாடியில் சிக்கி கையை இழந்தவருக்கு அவரது கையை யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள் வெற்றிகரமாக பொருத்தியுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலையின் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியர் இளஞ்செழிய பல்லவன் உள்ளிட்ட வைத்தியர்களால் ...

02

## இலங்கை தொடர்பில் அமெரிக்கா எச்சரிக்கை




நாட்டில் தற்போது பரவிவரும் கொரோனா தொற்றால் ஏற்படும் அச்சுறுத்தல் காரணமாக இலங்கைக்குச் சுற்றுலா மேற்கொள்ள வேண்டாமென தனது நாட்டுப் பிரஜைகளை அமெரிக்கா கேட்டுக்கொண்டுள்ளது.

இலங்கைக்குச் சுற்றுலா செல்வதைத் தவிர்க்குமாறு பயணிகளுக்கு சீ.டி.சி. எனப்படும் அமெரிக்க நோய் கட்டுப்பாட்டு மற்றும் தடுப்பு மையம் நேற்று அறிவித்துள்ளது.

இலங்கை, ஜமெய்க்கா, ப்ரூனே ஆகிய நாடுகள் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக 4ஆம் கட்ட அபாய வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளதால் அந்த நாடுகளுக்குச் சுற்றுலா மேற்கொள்வதைத் தவிர்க்குமாறு அந்த மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கொரோனா பரிசோதனைகள்

### மதிப்பீடுசெய்ய முடியாத நிலையென சுகாதாரப் பரிசோதகர்கள் குற்றச்சாட்டு

(யோ.தர்மராஜ்)

நாட்டில் கொரோனா நோயாளர்களை அடையாளம் காண்பதற்கு முன்னெடுக்கப்படுகின்ற பி.சி.ஆர். மற்றும் ரெபிட் அன்ரிஜன் பரிசோதனைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொரோனா நோயாளர்களின் தரவுகள் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா நோயாளர்களை அடையாளம் காண்பதற்கு முன்னெடுக்கப்படும் பரிசோதனைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. பரிசோதனைகள் இவ்வாறு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் நாளுக்கு நாள் பதிவாகும் கொரோனா நோயாளர்களுக்கமைய சமூகத்தில் கொரோனா பரவுவது குறித்து மதிப்பீடுசெய்ய முடியாதுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

02

## பாடசாலைகளை ஆரம்பிக்க பொருத்தமான சூழ்நிலை இல்லை



### சுகாதாரத்துறையினரால் உருவாக்க முடியாதென்கிறார் பிரதிப் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத்

(யோ.தர்மராஜ்)

நாட்டின் தற்போதைய கொரோனா நிலைமையினால் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கான பொருத்தமான சூழ்நிலை தற்போது இல்லை என்பதனாலேயே இதுவரை பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு சாதகமான சமிக்ஞையை வழங்காதுள்ளோம் என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

பாடசாலை ஆரம்பிப்பது குறித்து ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலைகளை திறப்பதற்கான பொருத்தமான சூழ்நிலை இருக்குமாக இருந்தால் நாங்கள் சாதகமான சமிக்ஞையை வழங்க முடியும். ஆனால், நாட்டின் தற்போதைய கொரோனா நிலைமைக்கமைய பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கான பொருத்தமான சூழ்நிலை தற்போது இல்லை என்பது அனைவரும் அறிந்ததே. இதனாலேயே, பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கான சாதகமான சமிக்ஞையை வழங்காதுள்ளோம்.

02

# மாலைத்தீவுகளுக்கு மணல் அனுப்பப்பட்டதாக குற்றச்சாட்டு; நிரூபித்தால் பதவி விலகுவதாக அமைச்சர் அமரவீர சூளுரை

மணல் அகழ்வில் ஈடுபட்டு மாலைதீவுகளுக்கு அனுப்பப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எந்த அமைச்சரோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினரோ ஈடுபட்டுள்ளார் என்பதை சாணக்கியன் நிரூபித்துக்காட்டினால், இந்த அமைச்சுப்பதவியிலிருந்தும், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் தாம் விலகுவதாக சுற்றுச்சூழல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.



மாலைதீவில் தீவொன்றை அமைப்பதற்காக, கிழக்கு மாகாணத்திலிருந்து மணல் அகழப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

இதுதொடர்பில் சுற்றுச்சூழல் அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் கூறுகையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த துணைத் தலைவர் மற்றும் பொறுப்புள்ள அமைச்சர் என்ற முறையில் தாம் தனது கருத்துகளை முன்வைப்பதாகவும், நாட்டின் தற்போதைய சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கமைய நாட்டின் வளங்களை எந்த வகையிலும் சட்டவிரோதமாக வெளியிடவோ, விற்கவோ அல்லது கடத்துவதற்கோ முடியாது என்றும் அமரவீர கூறினார்.

ஒரு தீவை உருவாக்க வேண்டுமானால் எவ்வளவு மணலின் அளவு தேவை என்பதை என்னால் கற்பனைகூட செய்து பார்க்க முடியவில்லை.

அப்படியானால், கப்பல்கள் மூலமே நாட்டிற்கு வெளியே மணல் அனுப்பப்பட வேண்டும், நாட்டின் சட்டங்களின் கீழ் சட்டவிரோதமாக அவ்வாறு செய்ய முடியாது என அமைச்சர் கூறினார்.

நமது கனிம வளங்கள் ஏற்றுமதி செய்யப்பட வேண்டுமானால், அதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மாலைதீவில் நீர் வடிகட்டிகளுக்கு விண்ணப்பிக்க கடந்த பருவத்தில் ஆறரை க்யூப் மணல் அனுப்பப்பட்டதை அமைச்சர் இதன் போது வெளிப்படுத்தினார்.

இது ஒரு இலங்கை நிறுவனத்தால் அனுப்பப்பட்டது. இதற்கான அனைத்து வரிகளும் வசூலிக்கப்பட்டுள்ளன என்றார்.

நம் நாட்டின் கனிம வளங்கள் நிறுவனம் ஒன்றினால் ஏற்றுமதி செய்யப்படுவதாகவும், அதிலிருந்து நாடு வருவாயைப் பெறுகிறது என்றும் அவர் கூறினார்.

எந்தச் சூழ்நிலையிலும் நம் நாட்டிலிருந்து மணலை ஏற்றுமதி செய்ய உரிமம் வழங்கப் படவில்லை என்றும் அவர் கூறினார்.

எனவே, இதுபோன்ற மோசடி எதுவும் நடக்கவில்லை என்று நான் பொறுப்புடன் கூறுகிறேன் என்று அமைச்சர் கூறினார்.

# கொவிட் தடுப்புக் குழுவிலிருந்து மற்றுமொரு உறுப்பினர் விலகல்

**கொவிட் தடுப்புக்கான தொழில்நுட்ப குழுவிலிருந்து மற்றுமொரு உறுப்பினர் விலகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

**இந்த குழுவில் அங்கம் வகித்த விசேட வைத்திய நிபுணர் டொக்டர் அசோக குணரத்னவே, இவ்வாறு விலகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

**கடந்த சில தினங்களுக்கு முன்னர், இந்த குழுவில் அங்கம் வகித்த விசேட வைத்திய நிபுணர் டொக்டர் ஆனந்த விஜேவிக்ரம, தனது பதவியை இராஜினாமா செய்திருந்தார்.**

**கொவிட் தடுப்புக்கான தொழில்நுட்ப குழுவிலிருந்து இரண்டு உறுப்பினர்கள் விலகியுள்ளமை தொடர்பில், சுகாதார அமைச்சின் கொவிட்-19 தொடர்பிலான பிரதான இணைப்பாளர் டொக்டர் அன்வர் ஹம்தானி கருத்து வெளியிட்டுள்ளார்.**

**பதவி விலகியவர்கள், மின்னஞ்சல் மூலம் தமது இராஜினாமா கடிதங்களை சுகாதார சேவை பணிப்பாளருக்கும், சுகாதார அமைச்சின் செயலாளருக்கும் அனுப்பியுள்ளனர்.**

**பதவி விலகுவது அவர்களுடைய தனிப்பட்ட விருப்பம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.**





***(தலவாக்கலை நிருபர்)***

***கொட்டகலை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பிரதேசத்துக்குட்பட்ட கிறேட்வெஸ்டன் கிராம சேவகர் பிரிவில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொவிட் 19 முதலாம் கட்ட தடுப்பூசி கிறேட்வெஸ்டன் தமிழ் வித்தியாலயத்தில் நேற்று செலுத்தப்பட்டது. இதில் கிறேட்வெஸ்டன், லூசா, ஸ்கல்பா மற்றும் ஒலிரூட் தோட்டங்களைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து 415 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டதாக கொட்டகலை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.***

# வெளிநாட்டவர் மூவருடன் 2,643 உடல்கள் ஓட்டமாவடி மஜ்மா நகரில் நல்லடக்கம்

***(மீராவோடை நிருபர்)***

கொரோனா தொற்றினால் மரணமடைந்த நபர்களை நல்லடக்கம் செய்யும் ஓட்டமாவடி – மஜ்மா நகர் மையவாடியில் நேற்று முன்தினம் (07) ஆம் திகதி அடக்கம் செய்யப்பட்ட 29 உடல்களுடன், அங்கு இதுவரை 2ஆயிரத்து 643 உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதாக ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர் தெரிவித்தார்.

செப்டெம்பர் முதலாம் திகதி தொடக்கம் 7 ஆம் திகதி வரையான ஒரு வாரத்தில் 228 உடல்கள் அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன. ஓகஸ்ட் மாத இறுதி வாரத்தில் 306 உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டன.

அந்தவகையில் கடந்த இரு வாரங்களை ஒப்பிடும்போது இவ்வாரத்தில் அடக்க வீதம் குறைவடைந்து காணப்படுகின்றது.

நாட்டின் பல பாகங்களிலும் இருந்து வரும் உடல்களை நல்லடக்கம் செய்யும் ஓட்டமாவடி மஜ்மா நகர் மையவாடியில், இதுவரை மூன்று வெளிநாட்டுப் பிரஜைகளின் உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதாக தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

# கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட மூவர் வாழைச்சேனையில் கைது

***(கனகராசா சரவணன்)***

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலஜஸ் பிரிவிலுள்ள கண்ணகிபுரம் மற்றும் யூனியன் கொலனி பகுதிகளில் கசிப்பு உற்பத்திசெய்து வியாபாரத்தில் ஈடுபட்ட 3 பெண்களை நேற்று முன்தினம் (07) கைதுசெய்ததுடன், 8 போத்தல் கசிப்பு மற்றும் கசிப்பு தயாரிக்கும் உபகரணங்களையும் மீட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து நேற்று முன்தினம் இரவு கண்ணகிபுரம் மற்றும் யூனியன் கொலனி ஆகிய பிரதேசத்திலுள்ள 3 வீடுகளை முற்றுகையிட்டனர். இதன்போது கண்ணகிபுரத்தில் ஒரு பெண்ணை 2 போத்தல் கசிப்புடனும் யூனியன் கொலனியில் கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட பெண் ஒருவரை 6 போத்தல் கசிப்புடனும் அதே பகுதியில் கசிப்பு தயாரிப்பில் ஈடுபட்ட பெண் ஒருவர் உட்பட 3 பெண்களை கைதுசெய்தனர்.

இவர்களிடமிருந்து 8 போத்தல் கசிப்பு மற்றும் கசிப்பு தயாரிக்கும் உபகரணங்களை மீட்டுள்ளதாகவும் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# சட்டவிரோத மதுபான உற்பத்தியில் ஈடுபட்ட ஒருவர் மடக்கும்புரவில் கைது

***(தலவாக்கலை, நோட்டன் பிரிட்ஜ் நிருபர்கள்)***

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ள நிலையில் வட்டகொடை மடக்கும்புர மத்திய பிரிவில் சட்டவிரோதமாக மதுபான உற்பத்தியில் ஈடுபட்ட ஒருவர் தலவாக்கலை பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து 107 லீற்றர் கோடாவையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்ட நபர் சட்டவிரோதமாக மதுபானத்தை உற்பத்தி செய்து தோட்டத் தொழிலாளர்களுக்கு விற்பனை செய்து வந்துள்ளார் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.



கைது செய்யப்பட்ட சந்தேக நபருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

# பொகவந்தலாவ சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இரண்டாம் கட்டமாக 6,420 பேருக்கு தடுப்பூசி ஏற்றல்





***(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)***

பொகவந்தலாவ பொது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்குட்பட்ட பொகவந்தலாவ கேர்க்கஸ்வோல்ட் மற்றும் புளியாவத்தை ஆகிய பகுதிகளில் 30 வயதுக்கு மேற்பட்டோருக்கான இரண்டாம் கட்ட தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை நேற்று பொகவந்தலாவ பொது சுகாதார வைத்திய அதிகாரி வை.எல்.பி.பஸ்நாயக்க தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது பொகவந்தலாவ கேர்க்கஸ்வோல்ட் இல 02 தமிழ் வித்தியாலயத்தில் 3ஆயிரத்து 260 பேருக்கும் புளியாவத்தை தமிழ் மகாவித்தியாலயத்தில் 3ஆயிரத்து 160 பேர் உட்பட மொத்தம் 6ஆயிரத்து 420 பேருக்கு சினோபார்ம் இரண்டாம் கட்ட தடுப்பூசி செலுத்தப்பட்டது. இதேவேளை, இரண்டாம் கட்ட சினோபார்ம் தடுப்பூசியினை பெற்றுக்கொள்ள பெருந்திரளான மக்கள் நீண்டவரிசையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சுற்றுலாப் பயணிகள்...

நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

கனடா, ஜேர்மனி, இங்கிலாந்து, பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளிலிருந்தே அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளின் வருகை பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நோயாளர்களில்...

ஆனால், முதலாம் திகதி 470 நோயாளர்கள் வரை இருந்தனர். அவ்வாறாயின் நோயாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை, அடையாளம் காணப்படுகின்ற நோயாளர்களின் எண்ணிக்கை 50 வீதமானோருக்கு ஒட்சிசன் தேவை ஏற்படுகின்றது. நோயாளர்கள் குறைவடைந்தாலும் ஒட்சிசன் தேவையில் வீழ்ச்சி ஏற்படவில்லை. ஆகவே, ஒட்சிசன் வழங்கும் செயற்பாடுகளை நாங்கள் மேலும் மேம்படுத்தியுள்ளோம். அதன்படி, 300 வரையான நோயாளர்களுக்கு ஒட்சிசன் வழங்குவதற்கு தேவையான வசதிகளை நாங்கள் மேம்படுத்தியுள்ளோம்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் ஒட்சிசன் தட்டுப்பாடு ஏற்படவில்லை. எங்களிடம் 20 தொன் ஒட்சிசன் கையிருப்பிலுள்ளது. மேலும் முன் ஏற்பாடாக 10 தொன் ஒட்சிசன் தாங்கி ஒன்றையும் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது –என்றார்.

## மட்டுப்படுத்தப்பட்ட...

கொரோனா அறிகுறிகள் கொண்டிருந்தால் மற்றும் முதல் நிலை தொடர்பாளர்களுக்கு முன்னெடுக்கப்படும் பரிசோதனைகளை மட்டுப்படுத்தி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் விசேட சுற்று நிருபம் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனால், குறிப்பிட்ட சில தரப்பினருக்கே பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுவதோடு, இதனூடாக அடையாளம் காணப்படும் நோயாளர்களை விட பல மடங்கான நோயாளர்கள் சமூகத்திற்குள் சுதந்திரமாக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, உத்தியோகபூர்வமாக சுகாதார தொற்று நோயியல் பிரிவு வெளியிடும் கொரோனா நோயாளர்கள் தொடர்பான தரவுகளை மாத்திரம் கொண்டு கொரோனா தொற்று தீவிரம் குறித்து மதிப்பிட முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பாடசாலைகளை...

பாடசாலைகளை ஆரம்பிப்பதற்காக பொருத்தமான சூழ்நிலையை உருவாக்கி அதற்குரிய செயற்றிட்டங்களை அதிகாரிகள் முன்வைப்பார்களாக இருந்தால் நாங்கள் சமிக்ஞையை வழங்குவோம்.

பாடசாலையை ஆரம்பிப்பதற்கான பொருத்தமான சூழ்நிலையை சுகாதாரத் துறையினர் உருவாக்க முடியாது. மாறாக, சுகாதாரத் துறையினர் கொரோனா நோயாளர்களை குறைப்பதற்கான நடவடிக்கைகளுக்கே முக்கியத்துவம் கொடுத்து முன்னெடுப்பார்கள்.

ஆகவே, பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் சிறுவர்களுக்கு மத்தியில் தொற்று பரவாதிருத்தல், பாடசாலை மாணவர்களுக்கிடையே தொற்று பரவாதிருத்தல் மற்றும் பாடசாலை மாணவர்களின் ஊடாக வீடுகளுக்கு கொரோனா தொற்று பரவாதிருக்கும் சூழ்நிலையை முதலில் உருவாக்க வேண்டும் - என்றார்.

## துண்டாடப்பட்ட...

இந்த சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இந்த சத்திர சிகிச்சை சுமார் 5 மணித்தியாலங்கள் இடம் பெற்றுள்ளன.

பருத்தித்துறையில் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மன்னாரைச் சேர்ந்த மீனவர் ஒருவர், நேற்று முன்தினம் (07) தவறுதலாக கடலில் விழுந்த நிலையில், அவரது வலது கை வலது கால் வள்ளத்தின் காற்றாடியில் சிக்குண்டு சிதைந்தது.

இந்நிலையில் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில், வைத்தியர்களால் கை மீளப் பொருத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இரண்டாவது பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணர் நியமிக்கப்படுவதற்கு யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் தடையாக இருப்பதாக நேற்று முன்தினம் அரச வைத்திய அதிகாரிகள் குற்றஞ்சுமத்தியுள்ளனர். இரண்டாவது பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணரும் நியமிக்கப்பட்டால், அதிகமானவர்கள் நன்மையடைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிழக்கில் கொரோனா தொற்றுக்கு சிகிச்சையளிக்க ஆளுநரால் சுதேச மருத்துவ பணிக்குழு நியமனம்

***(ஹஸ்பர் ஏ ஹலீம்)***

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உள்ளூர் மருந்துகளை வழங்குவதற்கும் நோயிலிருந்து விடுபட தேவையான மருந்துகளை பயன்படுத்தவும் ஊக்குவிப்பதற்கும் கிழக்கு மாகாணத்தில் ஒரு ஆயுர்வேத பணிக்குழுவை நியமித்துள்ளார்.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு தேவையான சிகிச்சையை விரைவில் வழங்குவதற்கான திட்டத்தை இக்குழு செயல்படுத்தவுள்ளது.

திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களையும் ஆளுநர் இதன்போது நியமித்தார்.

வேகமாக பரவும் கொரோனா நோயைக் கட்டுப்படுத்த உள்ளூர் மருத்துவம் மற்றும் ஆயுர்வேதத்தை ஊக்குவிப்பதில் இந்த பணிக்குழு நிபுணத்துவம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த பணிக்குழுவில் உள்ளடங்குவோர் பின்வருமாறு,

1. வெங்கமுவே நாலக தேரோ (வனவாசல கோவில், களனி)
2. துசித பி.வணிகசிங்க (பிரதம செயலாளர், கிழக்கு மாகாணம்)
3. ஏ.வி.எம் அன்சார் (செயலாளர், மாகாண சுகாதார அமைச்சு, கிழக்கு மாகாணம்)
4. டாக்டர் ஸ்ரீதர் (மாகாண ஆணையாளர், ஆயுர்வேத துறை, கிழக்கு மாகாணம்)
5.டாக்டர் ஷியாமளா வர்ணகுலேந்திரன் (கோனேஷபுரி ஆயுர்வேத மருத்துவமனை திருகோணமலை)
6.டாக்டர். மதிவம் நிரஞ்சன் (மருத்துவ கண்காணிப்பாளர், ஆயுர்வேத மருத்துவமனை, திருகோணமலை)
7.டாக்டர். ஜெ.பாஸ்கரன் (மருத்துவ மேற்பார்வையாளர், சித்த ஆயுர்வேத மருத்துவமனை, மட்டக்களப்பு)
8. டாக்டர் எம்.அலியார் நாபில் (மருத்துவ ஆயுர்வேத மருத்துவமனை, நிந்தவூர்)
9. DSL திஸாநாயக்க (கிராமிய ஆயுர்வேத மருத்துவமனை, வெரன்னகெடகொட)
10. திருமதி ஜே.எல்.என்.டி. குமாரிஹாமி (ஆயுர்வேத மருந்தகம், படையாதலாவ)
11. டாக்டர். எம்.வெர்மேந்திரன்
12.டாக்டர்.டி.எம்.ஏ.பிரியந்த வன்னியாராச்சி
13. டாக்டர். ஆயுர்வேத மருத்துவர் WMS சரத் கோட்டயவத்த
14. சுலைமான் லெப்பை முகமது (இலங்கை தொழிற்பயிற்சி ஆணையகம்)
15. டாக்டர். தி.ஸ்ரீ சந்திரராஜா
16. டாக்டர் WM நிலங்கா சுதர்சன (மாவட்ட ஆயுர்வேத மருத்துவமனை, தெஹியத்தகண்டிய)
17. சிந்தக விஜேவர்தன (ஆளுநரின் ஒருங்கிணைப்பு செயலாளர் கிழக்கு மாகாணம்)

## சர்வதேசத்தையும்...

அனுமதிக்க முடியாது. ஏப்ரல் தாக்குதல் தொடர்பாக அரசாங்கம் சர்வதேசத்திடம் செல்லுமாக இருந்தால் நாங்களும் சர்வதேசத்திடம் செல்வோம் என பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக பிரதமரும் வெளிவிவகார அமைச்சரும் பாப்பரசரை சந்திக்கவுள்ளமை குறித்து நேற்று (8) கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐரோப்பிய நாடுகளின் மாநாட்டில் பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளதாகவும் வத்திக்கானுக்குச் சென்று பாப்பரசரை சந்திக்கவுள்ளதாகவும் அறியக் கிடைத்தது. இது ஏப்ரல் தாக்குதலின் உண்மைகளை மூடிமறைத்து, நாங்கள் எதிர்பார்க்கும் நீதியை கொடுக்காது, அரசாங்கம் தங்களுக்கு தேவையான விதத்தில் முன்னெடுத்த செயற்பாடுகளின் ஊடாக உண்மைகளை மறைத்து சர்வதேச நாடுகளையும் பாப்பரசரையும் திசைதிருப்புவதற்கான மற்றொரு சூழ்ச்சியாகவே இது அமைந்துள்ளது.

ஏப்ரல் தாக்குதல் தொடர்பான உண்மைகள் வெளிவரும் என பொது மக்களுடன் நாங்களும் இரு வருடங்களுக்கு மேலாக காத்திருந்தோம். ஆனால், தற்போது நாங்கள் சர்வதேசத்திற்கு தள்ளப்படுகின்றோம். எனினும், ஏப்ரல் தாக்குதல் தொடர்பாக அரசாங்கம் சர்வதேசத்தை தெளிவுபடுத்துவதற்கு முயற்சிப்பதால் அதன் உண்மைகளை நாங்கள் சர்வதேசத்திடம் தெளிவுப்படுத்தும் செயற்பாடுகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளோம்.

இந்த அரசாங்கம் விசாரணைகளை மூடிமறைக்க முற்படுகிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் முயற்சிகள் எடுப்பதாக எங்களுக்கு தெரியவில்லை எனவும் சர்வதேசத்திடம் தெரிவித்துள்ளோம். ஆகவே, பொய்களைக் கூறி சர்வதேசத்தை திசைத்திருப்ப முயற்சிப்பதை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம்.

தாக்குதல் தொடர்பான விசாரணைகள் பக்கச்சார்பின்றி முன்னெடுக்க வேண்டும் என ஜனாதிபதிக்கு ஜூலை மாதத்தில் கடிதமொன்றை அனுப்பினோம். ஆனால், நீதியை திசைதிருப்பும் வகையிலான பதிலே எங்களுக்கு கிடைத்தது. எனவே, எங்களை ஏமாற்றி சர்வதேசத்தையும் ஏமாற்றுவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமாக இருந்தால் அதற்கு அனுமதிக்க முடியாது. ஏப்ரல் தாக்குதல் தொடர்பாக அரசாங்கம் சர்வதேசத்திடம் செல்லுமாக இருந்தால் நாங்களும் சர்வதேசத்திடம் செல்வோம். வெளிவிவகார மற்றும் அதுசார்ந்த குழு எடுத்துள்ள முடிவை முற்றாக மறுக்கின்றோம்.

நாட்டினுள்ளே தீர்வை வழங்காது சர்வதேசத்திடம் செல்வது பொருத்தமற்றது. அரசியலமைப்பின் படி தாக்குதல் தொடர்பாக உண்மைகளை கண்டறிவதற்கு அரசுக்கும் ஜனாதிபதிக்கும் முடியும். இலங்கை சட்டத்தின்படி ஏப்ரல் தாக்குதல் தொடர்பான உண்மைகளை கண்டறிய முடியும். மாறாக, சர்வதேசத்தை எதற்கு நாட வேண்டும். ஏப்ரல் தாக்குதல் தொடர்பான சூழ்ச்சி குறித்து எங்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். ஒருவரை பாதுகாக்க சட்டத்தை மாற்றுவதற்கு இடமளிக்க முடியாது. ஜனாதிபதி ஒரு நாடு ஒரு சட்டம் என்றாலும் தற்போது அரசுக்கு ஒரு நீதி எங்களுக்கு ஒரு நீதியாகவே இருக்கின்றன.

ஆகவே, ஏப்ரல் தாக்குதல் தொடர்பாக பிரதமரும் வெளிவிவகார அமைச்சரும் சர்வதேசத்தை நாடும் கீழ்த்தரமான செயலை செய்ய வேண்டாம். அது உங்களுக்கே திருப்பி வரும் - என்றார்.

# இன்றைய ராசி பலன்

நாள்: 09.09.2021 வியாழக்கிழமை – ஆவணி 24

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

**நட்சத்திரம்: அத்தம்**
பிற்பகல் 2.31 வரை
**சித்திரை**
பி.ப 2.31 - 10.09.2021
பிற்பகல் 12.58 வரை
**யோகம்: சுப்ரம்**
இரவு 8.42 வரை

**பிராம்யம்**
இரவு 8.42 - 10.09.2021
மாலை 5.42 வரை
**திதி: பூர்வ பட்ச திரிதீயை**
அதிகாலை 2.34 - 10.09.2021- அ.கா 12.18

**கரணம்: தைதுலம்**
அ.கா 2.34 - பி.ப 1.27
**கரஜம்**
பி.ப 1.27 - 10.09.2021
அதிகாலை 12.18 வரை

**சுப நேரங்கள்**
காலை 10.56 -பி.ப 12.06
பிற்பகல் 12.08 - 1.37

**அசுப நேரங்கள்**
**ராகு காலம்**
பிற்பகல் 1.40 - 3.12

**குளிகை காலம்**
காலை 9.07 - 10.39
**எமகண்ட காலம்**
காலை 6.05 - 7.36
**துர் முகூர்த்தம்**
காலை 10.06 - 10.55
பிற்பகல் 2.59 - 3.47

லோகநாயகி ஸஹஸ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி
நற்பவி நற்பவி

**மேடம்**
மங்கள நிகழ்வுகளின் செலவுகள் உண்டாகலாம். காலநிலை மாற்ற உடல்நல பாதிப்புகள் ஏற்படலாம். இளம் வயதினர் பெறும் சில வெற்றி வீட்டில் மகிழ்ச்சியை உருவாக்கும்.

**ரிஷபம்**
மென்பொருள் சம்பந்தமான வேலைகளில் இருப்பவர்களுக்கு நன்மைகள் உண்டாகலாம். புதிய முயற்சிகள் உருவாகும். நண்பர்களின் உதவிகள் கிடைக்கப் பெறலாம்.

**மிதுனம்**
வேலைத்தளங்களில் அதிக வேலைகள் உண்டாகலாம். கல்வியை நிறைவுசெய்து தொழில் தேடும் நிலை நன்மை தரும். பயணங்கள் ஏற்படலாம்.

**கடகம்**
வழக்கு பிரச்சினைகள் நீங்கத் துவங்கும். பணிகளில் சில மாற்றங்களும், பணிகள் சரியான முறையில் நிறைவேறுதலும் உண்டாகலாம். காதலில் மனநிறைவு ஏற்படலாம்.

**சிம்மம்**
ஊடகத்துறையில் இருப்பவர்களுக்கு பணிகள் அதிகரிக்கும். கொடுத்த கடன்கள் திரும்ப கிடைக்கப் பெறலாம். பிறரின் மீது தேவையற்ற கருத்துகளை சொல்லாமல் இருப்பது நன்மை.

**கன்னி**
வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கப் பெறலாம். வேலைத்தளங்களில் பணியிட அல்லது பணி மாற்றங்கள் உருவாகலாம்.

**துலாம்**
உடல்நலத்தில் கவனம் தேவைப்படலாம். வெளிநாட்டு உறவுகளால் நல்ல செய்தி கிடைக்கப் பெறலாம். இறை தியானம் மன நிம்மதி தரும்.

**விருச்சிகம்**
திருமண விடயங்களில் சுபங்கள் உண்டாகும். மாணவர்களின் கல்வி மேம்படும். பரம்பரை சொத்து விடயங்களில் சாதக நிலை ஏற்படலாம். தம்பதியரிடையே மகிழ்ச்சி பெருகும்.

**தனுசு**
வீடு/காணி வாங்கும் சுபங்கள் உண்டாகும். அரசாங்க பணிகளில் இருப்பவர்களுக்கு பணிகளில் மேலதிக அதிகாரங்கள் கிடைக்கப் பெறலாம். பணியிடங்களில் உயர்பதவியில் இருப்பவர்களின் ஆதரவு கிடைக்கப் பெறலாம்.

**மகரம்**
வணிகத்தில் புதிய எண்ணங்கள் உண்டாகலாம். வேலைத்தளங்களில் சிறப்பாக பணிகள் நிறைவேறும். இல்லத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் மன நிறைவை தரலாம்.

**கும்பம்**
வணிகத்தில் மேலதிக முதலீட்டை அல்லது முயற்சியை இன்று தவிர்ப்பது நன்மை. பணிகளில் பொறுமை மற்றும் பொறுப்பு தேவைப்படலாம். காலில் வலி ஏற்படலாம். இறைவணக்கம் பிரச்சினைகளை குறைக்கும்.
சந்திராஷ்டமம்: சதயம் நட்சத்திரத்திற்கு காலை 8.53 வரை. பூரட்டாதி நட்சத்திரம் பாதம் 1/2/3இற்கு காலை 8.53 - 10.09.2021 அதிகாலை 1.45 வரை.

**மீனம்**
வீடு/காணி வாங்கும் அல்லது விற்கும் தொழில் செய்பவர்களுக்கு நன்மை கிடைக்கலாம். வணிகத்திலும் புதிய முயற்சி உண்டாகலாம். உடல்நலம், மன நிம்மதி இறையருளால் கிடைக்கப் பெறலாம்.
சந்திராஷ்டமம்: பூரட்டாதி நட்சத்திரம் பாதம் 4இற்கு 10.09.2021 அதிகாலை 1.45 - காலை 7.21வரை.

# ஒரு வாரத்தில் வடக்கில் 4 ஆயிரம் கொரோனா நோயாளர்கள்

வடமாகாணத்தில் கடந்த ஒரு வாரத்தில் 4 ஆயிரத்து 83 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது. அத்துடன், இந்த மாகாணத்தில் 106 பேர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளதாகவும் சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வடமாகாணத்தில் கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 515ஆக உயர்வடைந்துள்ளது. நேற்று முன்தினம் 569 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அவர்களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 246 பேரும், வவுனியாவில் 160 பேரும், கிளிநொச்சியில் 99 பேரும், முல்லைத்தீவில் 39 பேரும், மன்னாரில் 31 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வடமாகாணத்தில் நேற்று முன்தினம் 22 பேர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளனர். வவுனியா மாவட்டத்தில் மாத்திரம் 16 பேர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் 5 பேரும் முல்லைத்தீவில் ஒருவரும் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. செப்டெம்பர் மாதத்தின் முதல் ஏழு நாட்களில் வடமாகாணத்தில் கொரோனா தொற்றுக்குள்ளான 4 ஆயிரத்து 83 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன், 106 பேர் உயிரிழந்துள்ளனர். இதேவேளை, கடந்த ஒரு வாரத்தில் வவுனியா மாவட்டத்தில் 45 பேரும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 43 பேரும் கிளிநொச்சியில் 9 பேரும் முல்லைத்தீவில் 8 பேரும் மன்னாரில் ஒருவரும் கொவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொற்றுக்குள்ளான ஆயிரத்து 724 பேரும், வவுனியாவில் ஆயிரத்து 56, கிளிநொச்சியில் 889, முல்லைத்தீவில் 275, மன்னாரில் 139 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வடமாகாணத்தில் 2020 மார்ச் தொடக்கம் டிசம்பர் வரை வவுனியா மாவட்டத்தில் ஒருவர் மட்டுமே கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளார். எனினும், நேற்று முன்தினம் செப்டெம்பர் 7ஆம் திகதிவரை 515 பேர் கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளனர். ஓகஸ்ட் மாதத்தில் அதிகப்படியாக 228 பேர் உயிரிழந்துள்ளனர்.

அவர்களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகப்படியாக 303 பேரும் வவுனியா மாவட்டத்தில் 119 பேரும் கொரோனா நோயினால் உயிரிழந்துள்ளனர். கிளிநொச்சியில் 45 பேரும் முல்லைத்தீவில் 28 பேரும் மன்னாரில் 20 பேரும் உயிரிழந்துள்ளனர்.

வடமாகாணத்தில் நேற்று முன்தினம் 30 ஆயிரத்து 912 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் யாழ். மாவட்டத்தில் 14 ஆயிரத்து 474 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 6 ஆயிரத்து 635 பேரும் வவுனியா மாவட்டத்தில் 5 ஆயிரத்து 788 பேரும் முல்லைத்தீவில் 2 ஆயிரத்து 192 பேரும் மன்னாரில் ஆயிரத்து 823 பேரும் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# வலம்புரிச் சங்குகள் – கஜமுத்து என்பவற்றுடன் ஒருவர் கைது



ரிதிகம பொலிஸ் பிரிவுக் குட்பட்ட ரம்பொடகல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் குருநாகல் விசேட அதிரடிப்படை அதிகாரி களினால மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது வலம்புரிச் சங்குகள் மற்றும் கஜமுத்து அகியவற்றுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இதுதொடர்பில் விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போர்து 02 வலம்புரிச் சங்குகள் மற்றும் ஒரு கஜமுத்து என்பவற்றுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டு ரிதிகம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

ரிதிகம பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரை ரம்பொடகல்ல நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், ரிதிகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பேருவளையில் மீட்கப்பட்ட ஹெரோயின்; பிரதான சந்தேகநபரைத் தேடி வலைவீச்சு



பேருவளை கடற்பரப்பில் கடந்த 31ஆம் திகதி அரச புலனாய்வுப் பிரிவு, கடற்படை மற்றும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு ஆகியவற்றால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 288 கிலோ 644 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் நீண்டநாள் மீன்பிடி படகிலிருந்து சந்தேகநபர்கள் ஐவர் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இந்த போதைப்பொருளை நாட்டுக்குள் கொண்டுவருவதற்கான பிரதான சந்தேகநபராக கருதப்படும் 'களுத்துறை சமிந்த தாப்ரேவ்' என்றழைக்கப்படும் பொப் மாலி தேடப்படுவதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இலக்கம் 128/09, நிசங்சலா மாவத்தை, தலாஹேன, மாலபே அல்லது இலக்கம் 522/1/2, சல்மல் மாவத்தை, உடுமுல்ல பத்தரமுல்லை பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடைய நபரொருவரே இவ்வாறு தேடப்பட்டு வருகின்றார். இவர் நீண்டநாட்களாக மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர் என்றும் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

## கொரோனா தொற்றுக்குள்ளானோர் விபரம்

| மொத்த பாதிப்பு | சிகிச்சை பெறுவோர் | குணமடைந்தோர் | புதிதாக அடையாளம் | மரணம் |
|---|---|---|---|---|
| 4,71,863 | 71,390 | 3,89,969 | 2,964 | 10,504 |

# நாட்டின் சில பிரதேசங்களில் இன்று மழையுடனான காலநிலை

சப்ரகமுவ, மேல் மற்றும் வடமத்திய ஆகிய மாகாணங்களிலும் மத்திய மாகாணத்தில் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் இன்று மழையுடனான காலநிலை நிலவுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்தத் திணைக்களம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஊவா மாகாணம், கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் சில பிரதேசங்களில் மாலை அல்லது இரவு வேலைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

ஒருசில பிரதேசங்களில் மழையுடன் கூடிய காலநிலை நிலவும். இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் கடும் காற்று மற்றும் இடி மின்னலினால் ஏற்படக்கூடிய அனர்த்தங்களை குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மக்களிடம் வினையமாக கேட்டுக்கொள்கிறோம்.

அதற்கமைய, புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலியினூடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்கரையை அண்மித்த சில பிரதேசங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

நாட்டைச் சூழவுள்ள கடற்கரைப் பிரதேசங்களில் காற்றுடன் கூடிய வானிலை நிலவும் என்பதுடன், காற்றின் வேகம் மணித்தியாலத்துக்கு 30 - 40 கிலோ மீற்றகளாக காணப்படும். காலியிலிருந்து ஹம்பாந்தோட்டையினூடாக பொத்துவில் வரை மற்றும் புத்தளத்திலிருந்து மன்னாரினூடாக காங்கேசன்துறை வரையான கடற்கரை பிரதேசங்களில் காற்றின் வேகம் மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர்களாக அதிகரித்து காணப்படும். ஒருசில கடற்பரப்புகளிலும் காற்றின் வேகம் ஓரளவு அதிகரித்துக் காணப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# வேலைவாய்ப்பின்றி ஆயிரம் சுதேச வைத்தியர்கள் வீடுகளில்

## அரச நியமனங்களை உடனடியாக வழங்குமாறு மருத்துவர் ஹபில் கோரிக்கை

(திருமலை நிருபர்)

கொரோனாவை சுதேச வைத்தியத்தின் மூலம் கட்டுப்படுத்த தகுதி வாய்ந்த ஆயிரம் வைத்தியர்கள் வேலைவாய்ப்பின்றி வீட்டில் இருப்பதாக வேலைவாய்ப்பற்ற சித்த வைத்திய சங்கத்தின் தலைவர் வைத்தியர் ஹபில் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் விளக்கமளித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஆயுர்வேத, சித்த, யுனானி வைத்திய துறைகளில் பட்டம் பெற்று உள்ளக பயிற்சிகளை நிறைவுசெய்த ஆயிரம் வைத்தியர்கள் கடந்த 2017ஆம் ஆண்டிலிருந்து அரச நியமனம் கிடைக்காமல் வேலைவாய்ப்பற்ற நிலையில் வீட்டிலிருக்கும் துர்ப்பாக்கிய நிலைமை எமது நாட்டில் மட்டும் நிலவுவது கவலைக்குரிய விடயமாகும்.

தற்போதைய கொரோனா இடர் காலத்தை கருத்திற்கொண்டு சுகாதாரத்துறையை வலுப்படுத்த வேலையற்ற சுதேச வைத்தியர்களுக்கு அரச நியமனம் வழங்கி கொரோனா சிகிச்சை நிலையங்களில் சேவையாற்ற வழிசெய்வதே அரசின் புத்திசாலித்தனமானதும் ஆரோக்கியமானதுமான முடிவாகுமென நினைக்கிறேன்.

மேலும், இது தொடர்பாக சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடியுடன் பல முறை பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டும் அது பலனளிக்கவில்லை. ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் அலுவலகங்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டும் இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை.

மாறாக, அலோபதி துறையில் உள்ளக பயிற்சியை தொடங்காத மாணவர்களை வேலைக்கு அமர்த்துவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருப்பது மிக்க வேதனையளிக்கிறது.

நாட்டுமக்களின் வரிப்பணத்தில் இலவச கல்வியை கற்று சுகாதாரத்துறையில் தேர்ச்சிபெற்ற வைத்தியர்களாகிய எமக்கு உடனடியாக அரச நியமனம் வழங்கி மக்களுக்கு புத்துணர்ச்சியுடன் சேவையாற்ற உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

# அநுராதபுரத்தில் மாத்திரம் ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட நெற்களஞ்சியங்கள் சுற்றிவளைப்பு

## 25 இலட்சம் கிலோவுக்கும் அதிகமான மூடைகள் நுகர்வோர் அதிகாரசபையினர் வசம்

(அநுராதபுரம் நிருபர்)

அநுராதபுர மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது ஐம்பதுக்கும் அதிகமான நெல் களஞ்சிய சாலைகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகாரசபையின் அநுராதபுர அலுவலகப் பொறுப்பதிகாரி பீ.ஏ.சீ.பி.பெரேரா தெரிவித்தார்.

இதுதொடர்பில் ஊடங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நுகர்வோர் அதிகாரசபையில் பதிவு செய்யப்படாத நெல் களஞ்சியசாலைகள் மீதான சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் கடந்த ஓகஸ்ட் மாதம் 27ஆம் திகதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது அநுராதபுர மாவட்டத்தில் மாத்திரம் ஐம்பதுக்கும் அதிகமான நெல் களஞ்சியசாலைகளுக்கு



சீல் வைக்கப்பட்டுள்ளது. இந்தக் களஞ்சியசாலைகளிலுள்ள 25 இலட்சம் கிலோவுக்கும் அதிகமான நெல் மூடைகள் நுகர்வோர் அதிகாரசபையினரது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

அநுராதபுர மாவட்டத்தின் கலன்பிந்துனு வெவ, தமுத்தேகம, ராஜாங்கனை, மிஹிந்தலை, மரதன்கடவல, கஹட்டகஸ்திகிலிய மற்றும் கல்கிரியாகம, புப்போகம, கலாஓயா சந்தி, பரசன்கஸ்வெவ, நாச்யாதுவ ஹத்தேஎல உள்ளிட்ட பகுதிகளிலேயே அந்தந்த பொலிஸ் பிரிவுகளிலுள்ள பொலிஸாரது உதவியுடன் நுகர்வோர் அதிகாரசபையின் சுற்றிவளைப்புப் பிரிவினர் சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளமை தெரியவந்துள்ளது.

நெல் சந்தைப்படுத்தும் சபையின் உத்தரவாத விலைக்கு நெல்லை விநியோகிப்பதற்கு எதிர்வரும் நாட்களில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதுடன், நுகர்வோர் அதிகாரசபையில் பதிவுசெய்யாது நெல்லை களஞ்சியப்படுத்திய அனைத்து களஞ்சியசாலை, அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தொடரவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# வவுனியாவில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசிகள் வழங்கிவைப்பு





(வவுனியா நிருபர்)

வவுனியாவில் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இரண்டாம் கட்ட கொவிட் தடுப்பூசிகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

வவுனியா சுகாதாரப் பிரிவினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து வவுனியா சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவின் 8 நிலையங்களில் காலை 9 மணிமுதல் சினோபார்ம் தடுப்பூசிகளை வழங்கினர்.

இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்குவதற்காக 81 ஆயிரம் தடுப்பூசிகள் வவுனியாவிற்கு வழங்கப்பட்டுள்ள நிலையில், ஒவ்வொரு நிலையங்களிலும் 500 பேருக்கு தடுப்பூசிகள் வழங்கப்பட்டன.

அதன்படி வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் வைத்தியர் பிரசன்னா தலைமையில் தோணிக்கல் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 60 வயதுக்கு மேற்பட்ட 500 பேருக்கு இரண்டாவது டோஸ் சினோபார்ம் தடுப்பூசிகள் வழங்கப்பட்டன.

இதில் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஆர்வத்துடன் தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டனர்.

தமிழன் THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2021, செப்டெம்பர் 09ஆம் திகதி, வியாழக்கிழமை

# சிந்தித்து நடக்குமா இலங்கை?

மன்னார் கடற்பரப்பிலுள்ள 267 பில்லியன் டொலர் பெறுமதியான எண்ணெய் மற்றும் எரிவாயு வளத்தினால் நாட்டின் மொத்த கடன்தொகையை போன்று மூன்று மடங்கு வருமானம் ஈட்டமுடியும் என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வலுசக்தி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வை மேற்கொள்ளும் முதலீட்டாளர்களுக்கு 50 வீதத்தை வழங்கினாலும் 133.5 மில்லியன் டொலர் அரசுக்குக் கிடைக்கும் எனவும், அது நாட்டின் மொத்த கடன் தொகையான 47 மில்லியன் டொலரை விட மூன்று மடங்காகும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் இரண்டாம் மதிப்பீட்டுக்காக முன்வைக்கப்படவுள்ள கனியவளங்கள் சட்டமூலம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில் அமைச்சர் இதனைக் குறிப்பிட்டதுடன், இந்தச் சட்டமூலத்துக்கு அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அனுமதியும் வழங்கப்பட்டது.

இலங்கை கனிய வளங்கள் அதிகாரசபையை ஸ்தாபித்தல் உள்ளிட்ட கனிய வளங்கள் ஆய்வு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்வதன் மூலம் அந்த நடவடிக்கைகளை முறைமைப்படுத்தும் நோக்கிலான இந்த சட்டமூலத்தை அரசின் முக்கிய விடயமொன்றாகக் கருதி நாடாளுமன்றத்துக்கு முன்வைப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மன்னார் கடற்பரப்பிலுள்ள எரிவாயுவினால் மாத்திரம் நுரைச்சோலை மின்சக்தி நிலையத்தை 120 வருடங்களுக்கு செயற்படுத்த முடியும் எனவும், அங்கு காணப்படும் எண்ணெயின் மூலம் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை 143 வருடங்களுக்கு செயற்படுத்த முடியும் எனவும் அமைச்சர் கம்மன்பில இதன்போது குறிப்பிட்டார்.

எமது அண்டைய நாடான இந்தியா 1940ஆம் ஆண்டுமுதல் இலங்கைக்கு அண்மித்த கடலிலிருந்து எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வில் ஈடுபட்டதுடன், பல்வேறு விடயங்கள் காரணமாக இலங்கைக்கு அதனை மேற்கொள்ள முடியாமல் போயுள்ளதாகவும், இது தொடர்பில் நிபுணர்கள் மத்தியில் இடம்பெற்ற நீண்ட கலந்துரையாடலையடுத்து இதற்கான பல காரணங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இலங்கையில் எண்ணெய் ஆய்வுக்காக உலகிலுள்ள பாரிய நிறுவனங்கள் முன்வரவில்லை எனவும் அதற்கு பல்வேறு காரணங்கள் காணப்படுவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

“இதற்கு முன்னர் இது தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கும்போது, இந்தத் துறையில் அதிகாரிகளுக்கு காணப்பட்ட நிபுணத்துவம் குறைவு என்பதால், கனிய வளங்கள் அதிகாரசபையை ஸ்தாபிப்பதன் மூலம் நிபுணர்களுக்கு இந்தப் பணியை வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுத்தோம். அதேபோன்று, கடந்த காலங்களில் அனுமதிப்பத்திரங்கள் வழங்குவது உள்ளிட்ட ஒழுங்குபடுத்தும் அதிகாரம் அமைச்சரவையை மையப்படுத்தி காணப்பட்டதால் அமைச்சர்கள் மாறும்போது அனைத்து நடவடிக்கைகளுக்கும் தடை ஏற்பட்டது. இதனால் அமைச்சருக்கு வழங்கப்பட்டிருந்த அனைத்து அதிகாரங்களையும் இந்த அதிகாரசபையின் பணிப்பாளர் சபைக்கு வழங்க நாம் நடவடிக்கை எடுத்தோம். அதேபோன்று, பழைமையான வரைபடங்களுக்குப் பதிலாக எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வுக்கு நவீன வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அதேபோன்று, பல மில்லியன் டொலர்கள் இதற்கு முதலிட வேண்டும் எனவும் இந்தப் பாரிய முதலீடுகளை பாதுகாக்கத் தேவையான பலம் வாய்ந்த நீதிக் கட்டமைப்பை அறிமுகப்படுத்துவதும், அமைச்சருக்கு ஆலோசனை வழங்கும் நோக்கில் விசேட குழுவொன்று நியமிக்கப்படுவதும் இந்த சட்டமூலத்தின் ஊடாக இடம்பெறுவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

பொதுவாக உலகில் எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வின்போது ஒரு நாட்டில் ஏழு கிணறுகள் அகழ்வு செய்யும்போது ஒன்று வெற்றிபெறுவதாகவும், நோர்வே நாட்டுக்கு முதலாவது வெற்றியடைவதற்கு 31 கிணறுகள் அகழ்வு செய்யவேண்டி ஏற்பட்டதாகவும், இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட 4 கிணறுகள் அகழ்வின்போதும் 3 கிணறுகள் வெற்றியடைந்தமை நல்லதொரு நிலைமை என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மன்னார் வளைகுடாவில் கனிய வளங்கள், எரிவாயு சக்திகள் இருப்பதாக காலம் காலமாக செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. புலிகளுடனான போர்நிறுத்தத்திற்கு நோர்வே அரசு இலங்கைக்கு உதவ முன்வந்தபோது, இந்த இயற்கை வளத்தை கண்வைத்தே நோர்வே இலங்கைக்கு வருவதாக அப்போது விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இப்போதும் உலக நாடுகளை தனது பக்கம் அரவணைக்க இலங்கை இப்படியான செய்திகளை சொல்லிக்கொண்டிருக்கிறது.

ஆனால், இலங்கையை பொறுத்தவரை இந்த இயற்கை வளத்தை ஆராயும் பொறுப்பை சீனாவிடம் கையளிக்க ஆலோசித்துவருவதாக சொல்லப்படுகிறது. கொரோனா சூழ்நிலையாலும் கிரமமற்ற நிதி முகாமையாலும் தள்ளாடும் இலங்கை பொருளாதாரத்தை நிலைநிறுத்த அதற்காக உலகத்திற்கு ஆசை காட்டும் அரசின் புது முயற்சியே இந்த மன்னார் எண்ணெய் விடயம்.

போருக்குப் பின்னர் தமிழர் பகுதிகளில் நிலையான அபிவிருத்தி அல்லது அவர்களுக்கான உரிமைகளை வழங்க அக்கறை காட்டாத அரசு, தமிழர் பகுதி வளங்களை மட்டும் பறித்தெடுப்பதில் அக்கறை காட்டுகிறது. அதேபோல் சர்வதேச நாடுகளும் தமிழர் எக்கேடு கெட்டாலென்ன என்றபடி தமிழர் நில வளங்களை ஆக்கிரமிக்க கங்கணங்கட்டி நிற்கின்றன.

மன்னார் எரிவாயு விடயத்தில் இலங்கை கண்டுகொண்டிருக்கும் கனவுக்கு மேலதிகமாக பெரும் இக்கட்டுகளே வந்துநிற்கப்போகின்றன. ஏற்கனவே சீனாவை உள்ளே அனுமதித்து மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தடுமாறிக்கொண்டிருக்கும் கொழும்பு, மன்னார் இயற்கைவள விடயத்தில் இராஜதந்திர ரீதியில் சிக்கல்களையும் சந்திக்கும் என்பதில் ஐயமில்லை. பிராந்தியத்தில் இந்தியாவை மீறி செய்யும் எந்த விடயங்களும் இலங்கைக்கு பலனளிக்கப்போவதில்லை. அதுவே பட்டறிவு. கடந்தகால வரலாறு. அதனை சிந்தித்து நடக்குமா இலங்கை?

# பள்ளிவாசல்கள் சம்மேளனம் அன்றும் இன்றும்



முஸ்லிம்களுடைய நலன்களுக்கான ஒற்றுமையின் தேவையாக சம்மேளனம் போன்ற சிவில் சமூக அமைப்புக் களின் அவசியம் தற்காலத்தில் உணரப்பட்டுள்ளது. இதன் காரணமாக ஏலவே உருவாக்கப்பட்டு செயலிழந்துள்ள சம்மேளனங்களையும் சிவில் சமூக அமைப்புகளையும் மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டிய தேவை இன்றைய சூழலில் மிகவும் முக்கியமான கவனத்தைப் பெறுகிறது.

இலங்கையில் முஸ்லிம்கள் நெருக்க மாகவும், ஏனைய சமூகங்களோடு இணைந்ததாகவும் வாழ்ந்து வருகின்றனர். இந்தச் சூழ்நிலையில் அவ்வப்போது நாட்டில் ஏற்படுகின்ற இனவாதப்பிரச்சினைகள், பல பாதிப்புகளையும், ஒற்றுமையின்மைகளையும். சவால்களையும் ஏற்படுத்தி வருகின்றன.

இவ்வாறான சூழ்நிலையில் முஸ்லிம் சமூகம் ஒற்றுமையாகவும், புரிந்துணர்வோடும் முஸ்லிம்கள் சம்பந்தமான கருத்துகளை ஒரே அணியில் முன்வைப்பதற்கு சம்மேளனம் போன்ற சிவில் அமைப்புகள் மிகவும் அவசியமாகும். இந்தவகையில் நாட்டில் பல இடங்களில் அமைக்கப்பட்டு இயங்கிவந்த பள்ளிவாசல் சம்மேளனங்களும் சிவில் அமைப்புகளும் செயலிழந்துள்ளன.

இந்நிலையில், இலங்கை வாழ் முஸ்லிம் சமூகத்தின் இருப்பு, பூர்வீகம், தொன்மை, என்பனவற்றைப் பேணி பெரும்பான்மை முஸ்லிம்களை அடையாளப்படுத்தும் மாவட்டமாக அம்பாறை நிர்வாக மாவட்டமும், திகாமடுல்ல தேர்தல் மாவட்டமும் இலங்கையின் சுதந்திர காலத்திலிருந்து செயற்பட்டு வருகின்றன.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறைமையின்கீழ் கிடைக்கப்பெற்ற அரசியல் வரப்பிரசாதமாக 5 வெட்டுப்புள்ளிகள் கிடைத்தமை மறைந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபின் வியூகத்திற்கிணங்க திகாமடுல்ல மாவட்டம் மூன்று முஸ்லிம் நாடாளுமன்ற பிரதிநிதிகளைப் பெற்றது. இதன் பின்புலமாக பலம் வாய்ந்த பல சிவில் சமூக அமைப்புகளின் அவசியத்தை அது உணர்த்தியது.

மறைந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் உயிருடன் இருக்கும்போது இணைந்த வடக்கு - கிழக்கில் முஸ்லிம்களின் வகிபாகம் என்ன என்ற சர்ச்சை கிளம்பியபோது அதற்குரிய முன்மொழிவாக “தென்கிழக்கு நிர்வாக அலகு” எனும் கோஷம் முன்வைக்கப்பட்டு அதன் பின்னணியில் ஒலுவில் பிரகடனம் 1997ஆம் ஆண்டு தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவ சமூகத்தில் நடத்தப்பட்டு அம்பாறை மாவட்ட முஸ்லிம் மக்களுக்கான சிவில் அமைப்பின் தேவையை அன்று உணர்த்தியது. இந்த அடிப்படையில் சிவில் அமைப்புகளின் பின்னணியில் பள்ளிவாசல்களின் வகிபாகம் என்ன என்பதைப் பார்க்கலாம்.

### இலங்கையில் மஸ்ஜிதுகளின் வகிபாகம்

இலங்கையில் மஸ்ஜிதுகளின் வரலாறு பேருவளை – மஸ்ஜிதுல் அப்பராரின் வரலாறோடு ஆரம்பமாகின்றது. இலங்கையில் அரபிகளின் முதல் விஜயத்தின் விளைவாக கடந்த 1001 வருடத்துக்கு முன் பேருவளை மருதானைக் கடற்கரை ஓரத்தில் கட்டப்பட்டு இன்றுவரை புதிய வடிவத்தில் கம்பீரமாகக் காட்சியளிக்கும், ‘மஸ்ஜிதுல் அப்ரார்’ இலங்கை முஸ்லிம்களின் தொன்மையைக் குறிப்பிடுகின்றது.

இதனைக் கௌரவப்படுத்தி இலங்கை அரசினால் தபால் முத்திரை ஒன்றும் அப்போது வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

முஸ்லிம் கலாசாரத் திணைக்களப் பதிவின்படி இலங்கை முழுவதும் கிட்டத்தட்ட 2500 மஸ்ஜிதுகள் பதிவு செய்யப்பட்ட பள்ளிவாசல்களாக இருப்பதாகவும் 900 இற்கு மேற்பட்ட தக்கியாக்கள், ஸாவியாக்கள் பதிவு செய்யப்படாத மஸ்ஜிதுகளாக இருப்பதாகவும் அறியக் கிடைக்கின்றது. இவற்றை நேர்த்தியாக இன்றைய நிலையில் இற்றைப்படுத்தி வலுவூட்டுவதற்காக மேற்படி திணைக்களம் மஸ்ஜித் குழுக்களைக் கொத்தணியாக பிராந்திய ரீதியில் உருவாக்கிக்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### சம்மேளனங்களின் தோற்றம்

பள்ளிவாசல்களின் கூட்டமைப்பாக மாற்றம் பெற்ற காலத்தின் தேவையாக ஒரு மருவிய விசேட சொல்லாக ‘சம்மேளனம்’ என்ற சொல் கருதப்படுகின்றது. இச்சொல் நபியவர்களின் காலத்திலோ, ஸஹாபா, தாபியீன்கள் காலத்திலோ இல்லாத இலங்கைச் சமூகத்திற்கே உரித்தான ஒரு சொல்லாக புழக்கத்திற்கு வந்துள்ளது. தென்கிழக்காசியாவிலுள்ள பெரும்பான்மை முஸ்லிம் நாடுகளில் சம்மேளனத்தின் தேவை இல்லாத நிலையில், முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் இலங்கை, இந்தியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளின் வரிசையில் இலங்கை வாழ் முஸ்லிம் சமூகத்தில் மாத்திரமே ‘சம்மேளனம்’ என்ற அமைப்பு இருந்துவருவது குறிப்பிடத்தக்க ஒரு வரலாற்று அம்சமாக மாறியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் முஸ்லிம்கள் செறிந்து வாழ்கின்ற பிரதேசங்களில் மஸ்ஜிதுகளின் எண்ணிக்கையும், ஜும்ஆ மஸ்ஜிதுகளின் எண்ணிக்கையும் படிப்படியாக அதிகரித்து வந்தமை காரணமாக ஒரு முஸ்லிம் ஊர் சார்ந்த முடிவுகளை குறிப்பிட்ட சில ஜும்ஆ பள்ளிவாசல்களைக்கொண்டு மாத்திரம் எடுப்பதில் பல நடைமுறைச் சவால்கள், தாமதங்கள் தோற்றம் பெற்றன.

இதற்குத் தீர்வாக அனைத்துப் பள்ளிவாசல்களையும் ஒரு கூட்டமைப்பின்கீழ் கொண்டுவரவேண்டிய ஒரு சமூகத் தேவைப்பாடு தோன்றியது. இத்தேவைப்பாடே ‘சம்மேளனம்’ என்ற புதிய பரிமாணத்தைப் பெற்றதாக காத்தான்குடி, அக்கரைப்பற்று பிரதேசங்களில் தோற்றம் பெற்ற சம்மேளனங்களின் வரலாற்றுப் பின்னணிகள் தெரிவிக்கின்றன.

இந்தவகையில் காத்தான்குடியில் அக்கிராசனர் ஷஹீத் அஹ்மத் லெப்பையும் அக்கரைப்பற்றில் பொத்துவில் முதல்வர் அல்-ஹாஜ் மர்ஹூம் உதுமாலெப்பையும் கிழக்கு மாகாண பள்ளிவாசல்களின் சம்மேளன வரலாற்றில் தடம்பதித்துள்ளமை இங்கு நினைவு கூரத்தக்கது.

“அல்லாஹ்வின் மஸ்ஜிதுகளை நிர்வகிப்பவர்கள் அல்லாஹ்வையும், மறுமை நாளையும் ஈமான் கொண்டவர்களாகவும், தொழுகையை நிலைநிறுத்தி அல்லாஹ்வைத் தவிர, வேறொருவருக்கும் பயப்படாதவர்களாகவும் திகழ வேண்டும்.”

அத்தகையோரே நேர்வழி பெற்றவர்கள் என அருள்மறை அல்-குர்ஆனின் “அத்தௌபா” அத்தியாயத்தின் 18ஆவது வசனம் எமக்கு எடுத்தியம்புகின்றது.

மேற்படி தகுதிகள் தனியொரு மஸ்ஜிதுக்குரிய ஒரு நிர்வாகியின் பண்பாகப் பார்க்கப்பட்டாலும், மஸ்ஜிதுகளின் கூட்டமைப்பு ஒரு சம்மேளனமாகப் பரிமாணம் எடுக்கும்போது மேற்படி தகுதிகள் பன்மடங்காக அதிகரித்துச்செல்லும் அவசியத்தை மேற்படி அல்-குர்ஆனின் வழிகாட்டல் எமக்கு சூசகமாக உணர்த்துவதை இஸ்லாமிய சிந்தனையாளர்கள் மறுப்பின்றி ஏற்றுக்கொள்வர்.

இதன்மூலம் சம்மேளனத்தின் வகிபாகம் சமூகத்தில் மறுக்க முடியாத – பலம் வாய்ந்த சிவில் சமூக அமைப்பாக இஸ்லாமியப் பார்வையில் சிந்திக்கப்பட்டு, பேசுபொருளாக மாறுவதை மறுப்பதற்கில்லை.

### காத்தான்குடி, அக்கரைப்பற்று சம்மேளனங்கள் ஒரு ஒப்பீடு

இவ்விரு கிராமங்களிலுமுள்ள உலமா சபையும், புத்திஜீவிகளும் துறைசார்ந்த நிபுணர்களும் இதனை ஆரம்பிப்பதற்கு மிகவும் ஒத்தாசையாயிருந்தார்கள். இக் கிராமங்கள் இரண்டும் தமிழ்க் கிராமங்களை அண்டியிருந்ததால் யுத்த காலத்தில் அடிக்கடி இனக்கலவரங்கள் ஏற்படத் தொடங்கின. அவற்றைச் சுமுகமாக தீர்த்துவைப்பதிலும், இக்கிராமங்களில் அமையப்பெற்ற பெரிய பள்ளிவாசல்களின் ஜமாஅத்தார் மத்தியில் ஒருமித்த கருத்துகளை ஏற்படுத்துவதிலும், இச்சம்மேளனங்கள் பெரும்பங்காற்றி வந்திருக்கின்றன.

சம்மேளனத்தின் நடவடிக்கைகள் வளர்ச்சியடைந்தபோது இப்பிராந்தியங்களில் கூட்டாக சக்காத் சேகரித்து வழங்குதல், உழ்ஹிய்யா கடமையை நிறைவேற்றல் என்பவற்றையும் செய்ய தலைப்பட்டன. காத்தான்குடி பள்ளிவாசல்கள் சம்மேளனம் மக்காவுக்கு ஹஜ்ஜி செய்வதற்கு அங்கிருந்து செல்லவுள்ளவர்களை ஒன்றுசேர்த்து ஒரு குழுவாக சம்மேளனத்தின் தலைமையில் சென்றுவரும் பொறுப்பையும் மேற்கொண்டு வருகின்றது.

இச்சம்மேளனங்களின் தூண்டுதலால் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் பல சம்மேளனங்கள் உதயமாகியுள்ளன. இதனடிப்படையில் அம்பாறை மாவட்டத்தில் உதயமான சம்மேளனத்தைப் பார்க்கலாம்.

### அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் தோற்றம்

1980ஆம் ஆண்டுமுதல் 2000ஆம் ஆண்டுவரை சுமார் இரண்டு தசாப்தங்கள் இயங்கிய சூழ்நிலையில் அம்பாறை மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தேவை வலுப்பெற்று இதுவரை சிவில் சமூக இயக்கத்திற்கு சமய, கலாசார பணிகளை முன்னெடுத்த சொந்த மாவட்ட முஸ்லிம்களுக்காக மட்டுமன்றி, கிழக்கு வாழ் முஸ்லிம்களுக்கும் குறிப்பாகவும், ஏனைய மாகாண முஸ்லிம்களுக்கும் பொதுவாகவும் அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனம் ஒரு புதிய பரிமாணமாக சிவில் அமைப்பாக உதயமாகி குரல் கொடுக்க வெளிக்கிட்டமை இம்மாவட்ட முஸ்லிம்களின் வாழ்வியலில் ஒரு திருப்புமுனையாகக் கருதப்படுகின்றது.

2008-07-17ஆம் திகதி ‘சுவடுகள்’ என்ற தலைப்பில், ‘அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் செயற்பாடுகளும், வரலாற்று நிகழ்வுகளும் ஒரு நோக்கு’ என்ற ஒரு சஞ்சிகை வெளியீடு செய்யப்பட்டது.

சம்மேளனத்தின் அன்றைய காலத் தலைவர், அஷ்ஷெய்க் மௌலவி எஸ்.எல்.எம்.ஹனீபா மதனி தனது செய்தியில் விடுத்த பின்வரும் குறிப்புகள், சம்மேளனம் ஒரு சிவில் அமைப்பாக புதிய பரிமாணம் எடுத்ததைப் பறைசாற்றுகின்றது.

“நாம் வாழும் சமூகத்தின் தேவைகள், சவால்கள், முட்டுக்கட்டைகள் எவை என இனங்கண்டு அவற்றிற்காக இச்சம்மேளனம் குரல் கொடுத்திருப்பதை சமகால சமூகமும் நமது பின் சந்ததியினரும் ‘சுவடுகள்’ எனும் இம் மலரூடாக அறிந்துகொள்வார்கள் என்பது எனது பணிவான எண்ணமாகும்”.

(நாளை தொடரும்...)

அஷ்ஷெய்க். அன்ஸார் பழீல் மௌலானா (நளீமி) M.A.
சிரேஷ்ட விரிவுரையாளர், மருதமுனை.

# மன்னார் கடற்பரப்பில் 267 பில்லியன் டொலர் பெறுமதியான எண்ணெய் - எரிவாயு வளம்

## மொத்த கடனைப்போன்று மும்மடங்கு வருமானத்தை ஈட்டமுடியும் என்கிறார் அமைச்சர் உதய கம்மன்பில



மன்னார் கடற்பரப்பிலுள்ள 267 பில்லியன் டொலர் பெறுமதியான எண்ணெய் மற்றும் எரிவாயு வளத்தினால் நாட்டின் மொத்த கடன் தொகையைபோன்று மூன்று மடங்கு வருமானம் ஈட்டமுடியுமென வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

வலுசக்தி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

முதலீட்டாளர்களுக்கு இந்த எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வை மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் 50 வீதத்தை வழங்கினாலும் 133.5 பில்லியன் டொலர் அரசுக்கு கிடைக்கும். இந்தத் தொகை நாட்டின் மொத்த கடன் தொகையான 47 பில்லியன் டொலரைவிட மூன்று மடங்காகும். கனியவளங்கள் சட்டமூலம் இரண்டாம் மதிப்பீட்டுக்காக நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

இலங்கை கனிய வளங்கள் அதிகாரசபையை ஸ்தாபித்தல் உள்ளிட்ட கனிய வளங்கள் ஆய்வு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்வதன் மூலம் அந்த நடவடிக்கைகளை முறைமைப்படுத்தும் நோக்கிலான இந்த சட்டமூலத்தை அரசின் முக்கிய விடயமொன்றாகக் கருதி நாடாளுமன்றத்துக்கு முன்வைத்துள்ளோம்.

மன்னார் கடற்பரப்பிலுள்ள எரிவாயுவினால் மாத்திரம் நுரைச்சோலை மின்சக்தி நிலையத்தை 120 வருடங்களுக்கு செயற்படுத்த முடியும். அங்கு காணப்படும் எண்ணெயின் மூலம் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை 143 வருடங்களுக்கு செயற்படுத்த முடியும்.

எமது அண்டைய நாடான இந்தியா 1940ஆம் ஆண்டுமுதல் இலங்கைக்கு அண்மித்த கடலிலிருந்து எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வில் ஈடுபட்டதுடன், பல்வேறு விடயங்கள் காரணமாக இலங்கைக்கு அதனை மேற்கொள்ள முடியாமல்போயுள்ளது.

இது தொடர்பில் நிபுணர்கள் மத்தியில் இடம்பெற்ற நீண்ட கலந்துரையாடலையடுத்து இதற்கான பல காரணங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் இலங்கையில் எண்ணெய் ஆய்வுக்காக உலகிலுள்ள நிறுவனங்கள் முன்வர வில்லை. அதற்கு பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன.

கடந்த காலங்களில் இது தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டபோது, இந்தத் துறையில் அதிகாரிகளுக்கு காணப்பட்ட நிபுணத்துவம் குறைவு என்பதால், கனிய வளங்கள் அதிகாரசபையை ஸ்தாபிப்பதன் மூலம் நிபுணர்களுக்கு இந்தப் பணியை வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுத்தோம்.

அதேபோன்று, கடந்த காலங்களில் அனுமதிப் பத்திரங்கள் வழங்குவது உள்ளிட்ட ஒழுங்குபடுத்தும் அதிகாரம் அமைச்சரவையை மையப்படுத்தி காணப்பட்டதால் அமைச்சர்கள் மாறும்போது அனைத்து நடவடிக்கைகளுக்கும் தடை ஏற்பட்டது.

இதனால் அமைச்சருக்கு வழங்கப்பட்டிருந்த அனைத்து அதிகாரங்களையும் இந்த அதிகார சபையின் பணிப்பாளர் சபைக்கு வழங்க நாம் நடவடிக்கை எடுத்தோம். அதேபோன்று, பழைமையான வரைபடங்களுக்குப் பதிலாக எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வுக்கு நவீன வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

பல பில்லியன் டொலர்கள் இதற்கு முதலிட வேண்டும். இந்த பாரிய முதலீடுகளை பாதுகாக்க தேவையான பலம் வாய்ந்த நீதிக் கட்டமைப்பை அறிமுகப்படுத்துவதும், அமைச்சருக்கு ஆலோசனை வழங்கும் நோக்கில் விசேட குழுவொன்று நியமிக்கப்படுவதும் இந்த சட்டமூலத்தின் ஊடாக இடம்பெறும்.

பொதுவாக உலகில் எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வின்போது ஒரு நாட்டில் ஏழு கிணறுகள் அகழ்வு செய்யும்போது ஒன்று வெற்றிபெறுகிறது. அதனடிப்படையில் இந்த விடயத்தில் வெற்றியை பெற்றுக்கொள்ள ஆரம்பத்தில் நோர்வே 31 கிணறுகளை அகழ்வுக்கு உட்படுத்த வேண்டி ஏற்பட்டது. இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட 4 கிணறுகள் அகழ்வின்போதும் 3 கிணறுகள் வெற்றியடைந்தமை நல்லதொரு நிலைமை.

இந்த நடவடிக்கைகளுக்காக உலகம்பூராகவுமுள்ள துறைசார்ந்த இலங்கை நிபுணர்களின் உதவியை பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் குழுவின் உறுப்பினர்களான, சந்திம வீரக்கொடி எம்.பி., நளின் பண்டார எம்.பி., முதிதா பிரஷாந்தி எம்.பி., குணதிலக்க ராஜபக்ஷ எம்.பி., இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர, பி.வை.ஜி.ரத்னசேகர எம்.பி., வலுசக்தி அமைச்சின் செயலாளர் கே.டி.ஆர்.ஒல்கா ஆகியோர் கலந்துகொண்டனர்.

கனியவளங்கள் சட்டமூலத்துக்கு அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அனுமதி கிடைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மண்வெட்டியால் தாக்கி ஒருவர் கொலை

கொடவெஹெர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திகென்னேவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரு தரப்பினருக்கிடையில் ஏற்பட்ட முரண்பாட்டில் ஒருவர் மண்வெட்டியால் அடித்துக் கொலைசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இரு தரப்பினரிடையே ஏற்பட்ட காணிப் பிரச்சினையால் நபரொருவர் மண்வெட்டியால் தாக்கப்பட்டு படுகாயங்களுக்குள்ளாகிய நிலையில் நிக்கவெரட்டிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார். இதுதொடர்பில் கொடவெஹெர பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

திகென்னேவ, கொடவெஹெர பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் நிக்கவெரட்டிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஆண் சந்தேகநபரொருவரும் பெண் சந்தேகநபரொருவரும் கைதுசெய் யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட இருவரும் கணவன், மனைவி என்பதுடன், இருவரையும் நிக்கவெரட்டிய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆழ்கடல் மீன்பிடிக் கலன்களுக்கு கண்காணிப்பு கருவிகள் அமைச்சர் டக்ளஸால் வழங்கிவைப்பு





ஆழ்கடல் மீன்பிடி பலநாள் கலன்களுக்கான வி.எம்.எஸ். கண்காணிப்பு உபகரணங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வு நேற்று கொழும்பு டிக்கோவிட்ட மீன்பிடித் துறைமுகத்தில் நடைபெற்றது. அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் பெற்றுக்கொள்ளப்பட்ட சுமார் 4 ஆயிரத்து 200 வி.எம்.எஸ். படகு கண்காணிப்பு உபகரணங்களை படகு உரிமையாளர்களுக்கு பகிர்ந்தளிக்கும் முதற்கட்ட நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கையில் பதிவு செய்யப்பட்ட சுமார் 6 ஆயிரத்து 500 ஆழ்கடல் பலநாள் மீன்பிடிக் கலன்கள் பயன்பாட்டில் இருக்கின்ற நிலையில், அனைத்து மீன்பிடிக் கலன்களுக்கும் கண்காணிப்பு கருவிகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

மேலும், vessel monitering system (வி.எம்.எஸ்.) கருவிகளை சரியான முறையில் பயன்படுத்துவதன் மூலம் எல்லை தாண்டிச்செல்லுதல் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் போன்றவற்றினால் ஏற்படக்கூடிய தேவையற்ற அசௌகரியங்களை தடுப்பதுடன், மீன்கள் செறிந்துவாழும் பிரதேசங்களை அடையாளம் கண்டுகொள்ளவும் உதவியாக இருக்கும் எனவும் தெரிவித்திருந்தார்.

சர்வதேச கடலில் மீன்பிடியில் ஈடுபடுகின்ற மீன்பிடிக் கலன்களில் வி.எம்.எஸ். கருவிகள் பொருத்தப்படவேண்டும் என்பது சர்வதேச நியமங்களில் ஒன்றாக இருக்கின்றது.

இந்நிலையில், குறித்த மீன்பிடிக் கலன் உரிமையாளர்களினால் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் நடைமுறையில் இருந்த குறித்த கண்காணிப்பு பொறிமுறையை வினைத்திறன்மிக்கதாக மாற்றித் தருமாறும் அனைத்து கலன்களுக்கும் பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர், ஐ.எம்.ஓ. எனப்படும் சர்வதேச நிறுவனம் மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இச்செயற்றிட்டத்தை ஆரம்பித்துவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





**இரத்மலானை முதலாம் லேனிலுள்ள ஜும்ஆப் பள்ளிவாசலில் 350இற்கும் மேற்பட்டோர் கொவிட் - 19 தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டனர். இங்கு சீன உற்பத்தியான சினோபார்ம் முதலாம், இரண்டாம் கட்ட தடுப்பூசிகள் 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டன. (படங்கள்: அஷ்ரப் ஏ சமத்)**

# யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா ஒக்டோபர் மாதத்துக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக 35ஆவது பொது பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி எதிர்வரும் 16, 17, 18ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த நிலையில், கொரோனா தொற்று நிலைமை காரணமாக அடுத்தமாதம் 7, 8, 9ஆம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அந்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் விளக்கமளித்து துணைவேந்தர் ஊடகப்பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 35ஆவது பொது பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதியை இம்மாதம் 16ஆம் திகதிமுதல் 18ஆம் திகதிவரை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், நாட்டின் தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு பட்டமளிப்பு விழா ஏற்பாடுகள் பற்றி ஆராய்வதற்காக பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாக் குழு நேற்று புதன்கிழமை காலை துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் கூடியது.

தற்போதைய நிலைமைகள் பற்றி ஆராய்ந்த குழு, நாட்டின் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு பட்டமளிப்பு விழாவை அடுத்த மாதம் 07ஆம் திகதிமுதல் 09ஆம் திகதிவரை யாழ். பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடத்துவதெனத் தீர்மானித்துள்ளது.

எனினும், சூழ்நிலைகளைப் பொறுத்து குறித்த தினங்களில் பட்டமளிப்பு விழாவைத் திட்டமிட்டபடி பட்டதாரிகளுடன் நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டால் மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு பட்டமளிப்பு விழாவை நிகழ்நிலையில் நடத்தி பட்டங்களை உறுதிப்படுத்துதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் பட்டமளிப்பு விழாவை நிகழ்நிலைக்கு மாற்றுவது தொடர்பான இறுதித் தீர்மானம் இம்மாதம் 23ஆம் திகதி அறிவிக்கப்படும் என்றும் ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அரசு ஒட்டுமொத்த விவசாயிகளையும் நடுத்தெருவுக்கு கொண்டுவந்துள்ளது

## உதயகுமார் எம்.பி. சபையில் சாடல்



சேதனப் பசளை என்ற போர்வையில் ஒட்டுமொத்த விவசாயிகளையும் இந்த அரசாங்கம் நடுத்தெருவுக்கு கொண்டு வந்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் உதயகுமார் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ''சேதனப் பசளை பயன்பாட்டை சரியான முறையில் ஒழுங்குபடுத்தி நடைமுறைப்படுத்தல்'' பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

சேதனப் பசளை பயன்படுத்தி விவசாயம் செய்யப்படுவது மிகவும் ஆரோக்கியமான வரவேற்கத்தக்க திட்டமாகும். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அதனை உடனடியாக நடைமுறைப்படுத்தி விவசாயிகளை சிரமத்துக்கு உள்ளாக்காமல், அரசாங்கம் பொறுப்புடன் செயற்படவேண்டும்.

திடீரென இரசாயன உர இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளது. சேதனப் பசளை பயன்பாட்டை அரசாங்கம் வலியுறுத்துகிறது. ஆனாலும், அதற்கான முறையான திட்டமொன்று முன்வைக்கப்படாமையால் விவசாயிகள் பலர் நிலத்தில் பயிர்களை நட்டு, அதற்கு உயிர் கொடுக்க முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக, நுவரெலியா மாவட்டத்தில் சிறியளவு விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் சாதாரண விவசாயிகள் முதல் மரக்கறி மற்றும் கிழங்கு உள்ளிட்ட ஏனைய பெரியளவு விவசாயிகளும் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். சேதனப் பசளையை முறையாக விநியோகிப்பதற்கு முன்னர் பயிரிடப்பட்டுள்ள பயிர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சேதனப் பசளை பயன்பாடு சிறந்த திட்டம். அதற்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஆனால், வெறுங்கையில் முழம்போட முடியாது என்பதை அரசாங்கம் புரிந்துகொண்டு தீர்மானங்களை எடுக்கவேண்டும்.

சேதனப் பசளை போதியளவு இல்லாத நாட்டில் திடீரென இரசாயன உர இறக்குமதியை தடை செய்தால் என்ன நடக்கும் என்பதை அரசாங்கம் தற்போது உணர்ந்துள்ளது. ஆனால், அதிலும் ஜனாதிபதி தொடர்ந்து இறக்குமதி தடை என்கிறார். அவருக்கு கீழ் உள்ள நிதி அமைச்சர் இறக்குமதி தடையை இரத்துசெய்து சுற்றறிக்கை மற்றும் கடிதம் அனுப்புகிறார். இவர்களுக்கு மத்தியிலுள்ள குழப்பத்தால் விவசாயிகள் தலைசுற்றி விழுகின்றனர்.

இரசாயன உரத்தை நம்பி விவசாயத்தில் ஈடுபடும் சிறு விவசாயிகள் பெரும் கஷ்டப்படுகின்றனர். சந்தையில் அவர்களுக்கு உரம் இரண்டு மூன்று மடங்கு அதிக விலைக்கு விற்கப்படுகிறது. இதனை தாங்கிக்கொள்ள முடியாது பலர் விவசாயத்தை கைவிட்டுள்ளனர். இந்தப் பிரச்சினைக்கும் அரசாங்கத்திடம் தீர்வு இல்லை.

உர இறக்குமதி தடையானது நாட்டில் இன்று பாரியளவு பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது. இரசாயன உர இறக்குமதி தடை விடயத்தில் அரசாங்கத்துக்குள் மாறுபட்ட தீர்மானங்கள் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது. இதனால் நாட்டுமக்கள் குழம்பிப் போயுள்ளனர். உண்மையில் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசாங்கத்தால் முடியவில்லை.

சேதனப் பசளை என்பது நமது நாட்டில் தயாரிக்கப்படவேண்டும். உள்ளூராட்சி மன்றங்களை இந்த உரத் தயாரிப்பு விடயத்துக்கு முழுமையாக பயன்படுத்த வேண்டும். அதற்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் ஆளணி உள்ளிட்ட அனைத்தையும் வழங்கி உள்நாட்டில் சேதனப் பசளை தயாரித்து அந்தந்த பிரதேசங்களுக்கு தேவையான விவசாயிகளுக்கு விநியோகிக்க வேண்டும். அவ்வாறு செய்தால், இரசாயன பதார்த்தமற்ற உணவுப்பொருட்களை மக்களுக்கு விநியோகிக்கலாம். ஆனால், இது எளிதான விடயமல்ல, பல சவால்களை எதிர்கொள்ளும் நிலை ஏற்படும். ஆகவே, இதனை படிப்படியாக நடைமுறைப்படுத்த வேண்டும். இன்றேல், நாடு பாரிய உணவுத் தட்டுப்பாட்டுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படலாம் - என்றார்.

# நல்லூர் கந்தசுவாமி ஆலய பூங்காவனத் திருவிழா







தினைப் புனத்தில் காவல் நின்ற நம்பிராஜன் மகளான வள்ளிக் குறத்தியை ஆட்கொண்டு அருள் செய்த ஐதீகத்தைப் பாவனைசெய்யும் வகையில் நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தின் 26ஆம் நாள் வள்ளியம்மாள் காந்தர்வக் கல்யாணக் காட்சிகளை பிரதிபலிக்கும் பூங்காவனத் திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

தினைப் புனத்தில், காவல் காத்துக்கொண்டிருந்த வள்ளியை வேடனாகவும், வேங்கை மரமாகவும், விருத்தனாகவும் வேடமிட்டு, லீலைகள் பல செய்து, அவளை மணம் புரிய விரும்பி, காதல் மொழிகளைப் பேசிய குமரன், வயோதிப உருவில் இருந்த அவரை இன்னார் என்று தெரியாமல் வள்ளி மிரண்டு விலக, அவளை மணக்க அண்ணனாகிய விநாயகரைத் துணைக்கு அழைத்தார்.

அவர் யானை வடிவில் வந்து, வள்ளியைத் துரத்தினார். யானையைக் கண்டு அஞ்சி, வயோதிபராக வந்த முருகனை அணைத்துக் கொண்டாள் வள்ளி என்பது ஐதீகம்.

# ஓட்டமாவடி ஆற்றில் மிதக்கும் மிருகக் கழிவுகள்; மீனவர்களின் தொழில் பாதிப்படைவதாக கவலை





(மீராவோடை நிருபர்)

கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட ஓட்டமாவடி பகுதிக்கு அழகு சேர்க்கும் ஒன்றாக ஆற்றங்கரை காணப்படுகிறது. இவ்வாறு இயற்கை அழகுமிக்க அந்த ஆற்றங்கரையை சிலர் நாசப்படுத்திச் செல்கின்றமை மீனவர்களையும், ஆற்றோரம் வசிப்பவர்களையும் பாதிப்படையச் செய்கிறது.

இந்த ஆற்றில் யாருக்கும் தெரியாமல் சிலர் மிருகக் கழிவுகளையும், குப்பைகளையும் வீசிச் செல்வதால் இந்த ஆற்றை நம்பி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வரும் மீனவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும்போது வலைகளிலும் தூண்டில்களிலும் மிருகக் கழிவுகளும் குப்பைகளும் சிக்கிக்கொள்வதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் தமது பெறுமதியான வலைகள் சேதமடைகின்றன. அத்துடன், ஆற்றில் தொட்டில்கள் அமைத்து மீன் வளர்ப்பு மேற்கொள்வதிலும் சிரமங்கள் ஏற்படுகின்றன. மீன்தொட்டில்களில் குப்பைகள் அகப்பட்டு தொட்டில்கள் சேதமடைகின்றன என்று மீனவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

குப்பைகளும், மிருகக் கழிவுகளும் இவ்வாறு ஆற்றில் வீசப்படுவதால் துர்நாற்றம் காரணமாக தாம் மிகவும் சிரமப்படுவதாக கரையோர மக்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறான சூழலில் தாம் சிறுவர்களையும், வயதானவர்களையும் வைத்துக்கொண்டு சுவாசிக்க சிரமப்படுகிறோம் என்று கரையோர மக்கள் மேலும் தங்களது கவலைகளை வெளிப்படுத்துகின்றனர்.

குறித்த ஆற்றில் ஒவ்வொரு நாளும் மாடு, கோழி ஆகியவற்றின் கழிவுகள் மிதந்து வருகின்றன. அத்துடன், குப்பைகளும் மூடை மூடையாக மிதந்து வருகின்றன என்று கரையோர மக்கள் தெரிவிக்கின்றனர்.

சுற்றுச்சூழலையும் இயற்கை வளங்களையும் நேசிக்கும் ஏராளமான மக்கள் மத்தியில் இவ்வாறான நபர்களின் வேண்டத்தகாத செயல்கள் இயற்கை வளத்தை அழித்தொழிக்கும் நிகழ்வாகத்தான் பார்க்கப்படுகிறது.

இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறாமல் இந்த அழகிய ஆற்றங்கரையை அழகுபடுத்தி அதனை பொது மக்கள் தங்களது பொழுதுபோக்கு இடமாக மாற்றியமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

# 350 உர மூடைகளை கடத்திய இருவர் கைது

(பாறுக் ஷிஹான்)

350 மூடைகள் யூரியா உள்ளிட்ட உர மூடைகளை அத்தியாவசிய சேவைகள் என்ற பெயர்ப்பலகை இடப்பட்ட லொறி ஒன்றில் கடத்திய இருவரை சம்மாந்துறை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

அம்பாறை பொலிஸ் விசேட பிரிவின் புலனாய்வுத் தகவலுக்கமைய நேற்று முன்தினம் மாலை சம்மாந்துறை பொலிஸார் பசளைகளை கடத்திச்சென்ற இருவரை கைதுசெய்ததுடன், லொறியுடனான 350 உர மூடைகளையும் மீட்டுள்ளனர்.

எம்பிலிப்பிட்டிய பல்லேகம பிரதேசத்திலிருந்து அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் பிரதேசத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட 350 உர மூடைகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன. இதன்போது லொறியில் பயணம் செய்த சாரதி மற்றும் நடத்துனர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், 350 உர மூடைகளையும் லொறியையும் கைப்பற்றினர்.

கைப்பற்றப்பட்ட யூரியா உள்ளிட்ட உர வகைகள் லொறி மற்றும் கைதுசெய்யப்பட்ட இருவர் தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன், நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




# அம்பாறை மாவட்டத்தில் திருத்தவேலை காரணமாக இன்றுமுதல் 18ஆம் திகதிவரை மின்வெட்டு அமுல்

## கல்முனை பிராந்திய மின்பொறியியலாளர் அறிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் கல்முனை மின் பொறியியலாளர் பிரிவில், அவசர திருத்த வேலை காரணமாக, இன்றுமுதல் 18ஆம் திகதிவரை காலை 08.30 மணிமுதல் மாலை 05 மணிவரை மின் துண்டிக்கப்படவுள்ளதாக இலங்கை மின்சார சபையின் கல்முனை பிராந்திய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று நிந்தவூர் மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட ஒலுவில் பிரதேசத்தில் மின் தடைப்படும். அத்துடன் நாளைய தினம் சம்மாந்துறை மின் பாவனையாளர் சேவை நிலையத்துக்குட்பட்ட மல்கம்பிட்டி வீதி, புளக் கிழக்கு மலையடிக் கிராமம், கல்லரிச்சல் ஆகிய பகுதிகளில் மின் தடைப்படும்.

கல்முனை, நிந்தவூர், சாய்ந்தமருது ஆகிய மின் பாவனையாளர் சேவை நிலையத்துக்குட்பட்ட அம்மன் கோவில், உடையார் வீதி, வி.வி.வீதி, இஸ்லாமாவாத் வீட்டுத்திட்டம், பாலமுனை, சின்னப்பாலமுனை, அட்டாளைச்சேனை, தரவைக் கோவில், கடற்கரைப்பள்ளி வீதி ஆகிய பகுதிகளில் எதிர்வரும் திங்கட்கிழமை மின் தடைப்படும்.

நிந்தவூர் மற்றும் சம்மாந்துறை ஆகிய மின் பாவனையாளர் சேவை நிலையத்துக்குட்பட்ட சின்னப்பாலமுனை மற்றும் கோணாவத்தை, உடங்கா, அம்பாறை வீதி, ஹிலால் புரம் ஆகிய பகுதிகளில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (14ஆம் திகதி) மின் தடைப்படும்.

சம்மாந்துறை மின் பாவனையாளர் சேவை நிலையத்துக்குட்பட்ட மாவடிப்பள்ளி, வைத்திய சாலை ஆகிய பகுதிகளில் எதிர்வரும் புதன்கிழமை (15ஆம் திகதி) மின் தடைப்படும்.

கல்முனை மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட மணல்சேனை, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு ஆகிய பகுதிகளில் வெள்ளிக்கிழமை (17ஆம் திகதி) மின் தடைப்படும்.

நிந்தவூர், சம்மாந்துறை ஆகிய மின் பாவனையாளர் சேவை நிலையத்துக்குட்பட்ட ஒலுவில் கிராமம், அல்-அர்சாத் பாடசாலை பகுதி, மாவடிக் கிராமம் ஆகிய பகுதிகளில் சனிக்கிழமை (18ஆம் திகதி) மின் தடை அமுலில் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# மட்டு. மாநகர சபையின் 2020ஆம் ஆண்டின் பாதீட்டு செயற்பாடுகளின் தாமதத்துக்கு நிர்வாக மாற்றமே காரணம்

## மாநகர முதல்வர் சரவணபவன்



(மட்டக்களப்பு நிருபர்)

மாநகரசபையின் நிர்வாக மாற்றத்தினால் ஏற்பட்டுள்ள குளறுபடிகளே எமது சபையால் முன்மொழியப்பட்டிருந்த 2020ஆம் ஆண்டு பாதீட்டு செயற்பாடுகள் தாமதமடைந்துள்ளமைக்குக் காரணமென மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகர சபையின் 2020ஆம் ஆண்டுக்குரிய பாதீட்டு வேலைத்திட்டங்களின் தாமதம் தொடர்பில் தெளிவுபடுத்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

2020ஆம் ஆண்டில் மத்திய அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த வேலைத்திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து எமது மாநகர சபையூடாக துரிதகதியில் அவ்வேலைத்திட்டங்களைச் செயற்படுத்தியிருந்தோம். ஏனெனில், மத்திய அரசாங்கத்தின் நிதியானது குறித்த நடப்பாண்டில் மேற்கொள்ளப்படாவிடின் மீளத் திரும்பிவிடும் என்ற காரணத்தின் நிமித்தம் அச்செயற்பாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும், எமது 2020ஆம் ஆண்டுக்கான பாதீட்டு செயற்பாடுகளை வருட இறுதியில் செயற்படுத்துவதற்கான திட்டங்களும் வகுத்திருந்தோம். ஆனால், துரதிர்ஷ்டவசமாக அவ்வருட இறுதியில் மாநகர சபையில் நிர்வாக மாற்றம் ஏற்பட்டு அனைத்து விடயங்களும் மந்த கதியில் இடம்பெற்றதோடு மாத்திரமல்லாமல் பல தாமதங்களும் இடம்பெற்றன.

அதன் விளைவாகவே எமது 2020ஆம் ஆண்டுக்கான பாதீட்டு வேலைத்திட்டங்கள் காலதாமதமாகின. கடந்த வருடத்தில் கொவிட் நிலைமைகளுக்குள்ளும் மாநகர சபை நிதியல்லாது வேறு நிதிகள் மூலம் சுமார் 115 வீதிகள், 17இற்கும் மேற்பட்ட கால்வாய்களுக்கான வேலைத்திட்டங்கள் இடம்பெற்றிருந்தன. ஆனால், இடம்பெற்ற நிர்வாக மாற்றத்தின் பின்னர் கடந்த 09 மாதங்களில் வெறும் 16 வீதிகளுக்கான வேலைத்திட்டங்களே நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கின்றமை வருத்தத்திற்குரிய விடயமாகும்.

மாநகர சபையின் நிர்வாக மாற்றத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள குளறுபடிகளே எமது சபையினால் முன்மொழியப்பட்டிருந்த 2020ஆம் ஆண்டு பாதீட்டு செயற்பாடுகள் தாமதடைந்துள்ளமைக்குக் காரணம். இவை தொடர்பில் மக்கள்தான் விளங்கிக்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# தம்பலகாமத்தில் தூக்கில் தொங்கிய இளைஞரொருவர் சடலமாக மீட்பு

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இளைஞரொருவர் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் முள்ளிப்பொத்தானை - சதாம் நகர் பகுதியைச் சேர்ந்த அலிபுல்லாஹ் அர்ஸான் (22 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

வீட்டிலிருந்த இளைஞரை காணவில்லை என தேடியபோது தூக்கில் தொங்கிய நிலையில் இருந்ததாகவும் பின்னர் உறவினர்கள் இளைஞரை கீழே இறக்கியபோது உயிரிழந்திருந்ததாகவும் ஆரம்ப விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

குறித்த சடலத்தை திடீர்மரண விசாரணை அதிகாரி சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டவுடன் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கவுள்ளதாகவும் மரணத்திற்கான காரணம் தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

# அம்பாறை மாவட்டத்தில் பெரும்போகச் செய்கைக்கு தாவர போஷாக்கு கொடுப்பனவு வழங்க தீர்மானம்

(நற்பிட்டிமுனை நிருபர்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள கமநல சேவைத் திணைக்களம் விவசாய விரிவாக்கல் அலுவலகங்கள் மூலம் 2021/2022 பெரும்போகச் செய்கைக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் தாவர போசாக்கு கொடுப்பனவை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் விவசாய விரிவாக்க அலுவலகங்கள் மூலம் பயிர்ச்செய்கைக் குழுத் தலைவர்களுக்கு வழங்கப்பட்ட விண்ணப்பங்கள் தற்போது சேகரிக்கப்பட்டு கமத்தொழில் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

முன்னோடியாக அம்பாறை மாவட்டத்தில் பெரும்போக ஆரம்பக் கூட்டங்களை நடத்துவதற்கான ஏற்பாடுகளை பிரதி விவசாயப் பணிப்பாளர் முகம்மட் சனீரின் அறிவுத்தலின்பேரில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாயப் போதனாசிரியர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

அம்பாறை மாவட்ட விவசாயி ஒருவர் ஒரு ஏக்கர் சேதனப் பசளையைத் தயாரிக்க அரசின் 5000 ரூபா கொடுப்பனவைப் பெறவுள்ளதோடு, கொடுப்பனவு ஆகக்கூடியது 5 ஏக்கருக்கே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, விவசாயிகளால் தயாரிக்கப்படும் சேதனப் பசளையை அரசு கொள்வனவுசெய்யும் திட்டமொன்றும் உள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கல்முனை பிரதான வீதியில் பழங்களை ஏற்றிவந்த லொறி தடம்புரண்டு விபத்து!



(மாளிகைக்காடு நிருபர்)

கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாண்டிருப்பு பிரதான வீதியில் வத்தப்பழங்களை ஏற்றிவந்த சிறிய ரக லொறி வீதியின் நடுவில் தடம்புரண்டு நேற்று முன்தினம் இரவு விபத்துக்குள்ளானது. வாகனத்தில் பயணித்த இருவர் அதிர்ஷ்டவசமாக உயிர்த்தப்பினர்.

ஓட்டமாவடியிலிருந்து அக்கரைப்பற்று நோக்கி ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஆயிரத்து 710 கிலோ நிறையுடைய தர்ப்பூசணி பழங்களை ஏற்றிவந்த லொறியின் பின்பக்க டயர் வெடித்ததால் குடைசாய்ந்து இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக கல்முனை பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது வாகனத்தில் பயணித்த இருவரும் சிறிய கீறல் காயங்களுக்கு உள்ளானதுடன், பழங்களும் முற்றாக வீதியில் சிதறி அதில் அதிகமானவை சேதமடைந்து காணப்பட்டன. இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த கல்முனை போக்குவரத்து பொலிஸார் வீதியில் பயணித்த பொதுமக்களின் உதவியுடன் வாகனத்தையும் பழங்களையும் அவ்விடத்தை விட்டும் அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மாடுகளை திருடிச்செல்ல முயற்சித்த இருவர் வவுணதீவு பொலிஸாரால் வாகனத்துடன் கைது




(மண்முனை திருபர்)

மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் பிரிவில் நான்கு பசு மாடுகள் திருடப்பட்டு சட்டவிரோதமான முறையில் ஏற்றிவந்த வாகனத்துடன் இருவரை வவுணதீவு பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாரசிங்கவின் ஆலோசனைக் கமைவாக, வவுணதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி. நிசாந்த அப்புஹாமியின் வழிகாட்டலில் இந்நடவடிக்கை நேற்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுணதீவு பிரதேசத்திலுள்ள வாழைக் காலை, ஊத்துமடு பகுதியிலிருந்து இந்த மாடுகள் சிறிய பட்டா ரக வாகனமொன்றில், காத்தான்குடிக்கு இறைச்சிக்காக அனுமதிப்பத்திரம் இல்லாது திருட்டுத்தனமாக கொண்டு செல்கையில் நேற்று அதிகாலை கைப்பற்றியுள்ளதுடன், அதிலிருந்த இரு நபர்களையும் கைதுசெய்துள்ளனர்.

வவுணதீவு பொலிஸ் நிலைய விசேட புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைவாக, உதவி பொலிஸ் பரிசோதகர் குணவர்தன, புலனாய்வு, உத்தியோகத்தர் டினேஸ், ஜெயவீர, வண்டார, மதுரங்க ஆகியோரால் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஊரடங்கு காலத்தை சாதகமாக பயன்படுத்தி மக்கள் நடமாட்டம் இல்லாத வேளையில், மாடுகள் களவாடப்பட்டு, இறைச்சிக்காக கொண்டுசென்றதாக வவுணதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிசாந்த அப்புஹாமி தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் நீதிமன்றம் ஊடாக சட்டநடவடிக்கை எடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# ஆப்கானிஸ்தானில் உருவானது புதிய அரசு; பெண்களுக்கு அமைச்சரவையில் இடமில்லை





ஆப்கானிஸ்தானில் அமையவுள்ள புதிய ஆட்சி தொடர்பான முக்கிய தகவல்களை தலிபான்கள் வெளியிட்டுள்ளனர். அதனடிப்படையில் ஆப்கானிஸ்தானின் பிரதமராக முல்லா முகமது ஹாசன் அறிவிக்கப்பட்டுள்ளார். அத்துடன், துணை பிரதமராக முல்லா பராதர் செயற்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானிலிருந்து வெளிநாட்டுப் படைகள் வெளியேறத் தொடங்கியதை யடுத்து, தலிபான்களின் ஆதிக்கம் மீண்டும் எழுச்சி பெறத் தொடங்கியது. தலைநகர் காபூலுக்குள் நுழைந்து கடந்த மாதம் 15ஆம் திகதி ஆட்சியதிகாரத்தை அவர்கள் கைப்பற்றினர். புதிய அரசு அமைப்பது தொடர்பான வேலைகளில் அவர்கள் மும்முரமாக ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானின் புதிய அரசு தொடர்பான அறிவிப்பை தலிபான் செய்தித் தொடர்பாளர் ஜபிஹுல்லா முஜாஹித் நேற்று வெளியிட்டார்.

அதன்படி, ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய எமிரேட் அரசின் உள்துறை அமைச்சராக சிராஜுதீன் ஹக்கானி நியமிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இதேபோல், இஸ்லாமிக் எமிரேட்ஸ் ஒவ் ஆப்கானிஸ்தானின் தற்காலிக வெளியுறவுத்துறை அமைச்சராக மௌலவி அமிர்கான் முத்தாகி செயற்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. முல்லா அப்துல் ஹக் வாஸிக் தேசிய பாதுகாப்பு இயக்குநரகத்தின் தலைவராக செயற்படுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானின் பிரதமராக முல்லா முகமது ஹாசன் அறிவிக்கப்பட்டுள்ளார். துணைப் பிரதமராக முல்லா பராதர் செயற்படுவார் என்று கூறப்பட்டுள்ளது. மவ்லவி அப்துல் சலாம் ஹனாபி மற்றொரு துணைப் பிரதமராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

## செவ்வாய் கிரகத்திலிருந்து கிடைத்த புதிய மாதிரி



செவ்வாயை ஆராய்வதற்காக நாசாவால் அனுப்பப்பட்ட பெர்சவரன்ஸ் ரோவர், முதல் முறையாக அங்கிருந்த ஒரு பாறையை குடைந்து வெற்றிகரமாக மாதிரிகளை சேகரித்துள்ளது. இதனை வரலாற்றுச் சிறப்புமிக்க தருணம் என ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நாசாவின் திட்டத்தின்கீழ் பெர்சவரன்ஸ் ரோவர் விண்கலம் 2020ஆம் ஆண்டு ஜூலை 30ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டது. இவ்வருடம் பெப்ரவரியில் அது வெற்றிகரமாக தரையிறங்கி பல தகவல்களை சேகரித்து அனுப்பி வருகிறது. முக்கிய கட்டமாக அங்குள்ள பாறையிலிருந்து மாதிரிகளை சேகரிக்கும் பணிகளை ஓகஸ்ட் முதல்வாரம் தொடங்கியது. அது தோல்வியில் முடிந்தது.

இந்நிலையில், செப்டெம்பர் 06ஆம் திகதி பெர்சவரன்ஸில் உள்ள 7 அடி நீள ரோபாடிக் கை, பாறையொன்றை குடைந்து வெற்றிகரமாக மாதிரிகளை எடுத்துள்ளது. நாசாவிற்கு அதன் தெளிவற்ற புகைப்படங்கள்தான் தற்போதைக்குக் கிடைத்துள்ளன. இருப்பினும், முதல் மாதிரி பெர்சவரன்ஸால் சேகரிக்கப்பட்டதை நாசா உறுதி செய்துள்ளது. அம்மாதிரிகள் பாதுகாப்பான குப்பிகளுக்குள் சேர்க்கப்பட்டுள்ளன. இதனை செவ்வாய் கிரக ஆய்வில் ஒரு மைல்கல் என்று நாசா கூறியுள்ளது.

உலக செய்திகள்

## விடுதலையாகிறார் பிரிட்னி ஸ்பியர்ஸ்!



அமெரிக்காவைச் சேர்ந்த பன்முகத் திறமைகொண்ட பிரிட்னி ஸ்பியர்ஸ், நீதிமன்ற உத்தரவின்பேரில் கடந்த 13 வருட காலமாக சுயமாக தீர்மானம் எடுக்கமுடியாத நிலையில் இருந்தார். இப்போது அந்தக் கட்டுப்பாட்டிலிருந்து விடுதலையாவதற்கான வாய்ப்புகள் உருவாகியுள்ளன.

பிரிட்னி ஸ்பியர்ஸ், தனது தந்தையின் முழுமையான கட்டுப்பாட்டில் இருந்ததுடன், அந்தக் கட்டுப்பாடுகளை விடுவிப்பதற்கு நீதிமன்றத்தினூடாக சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது பொருளாதாரம் சார்ந்த, வாழ்க்கை சார்ந்த எந்தவொரு முடிவையும் எடுக்கும் உரிமை பிரிட்னி ஸ்பியர்ஸுக்கு மறுக்கப்பட்டது. கடந்த 13 ஆண்டுகளாகவே தனது வாழ்க்கை குறித்த எந்த முடிவையும் சுயமாக எடுக்க உரிமை இல்லாதவராக பிரிட்னி ஸ்பியர்ஸ் உள்ளார்.

இத்தனை வருடங்களாக தான் அனுபவித்துவரும் கட்டுப்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என பிரிட்னி ஸ்பியர்ஸ் அண்மையில் நீதிமன்றத்தில் உருக்கமான வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்தவர் பிரபல பொப் இசைப் பாடகி பிரிட்னி ஸ்பியர்ஸ், பாடகி, பாடலாசியர், நடிகை என பன்முகத்தன்மை கொண்ட இவர், தனது பதின்பருவத்திலேயே பொப் இசையில் மிகப் பிரபலமாக அறியப்பட்டார். இதையடுத்து பொப் இசையின் இளவரசி என பிரிட்னி ஸ்பியர்ஸ் அழைக்கப்பட்டார்.

எந்தளவுக்கு புகழின் உச்சக்கு சென்றாரோ அதே அளவு சர்ச்சைகளிலும் சிக்கியவர் பிரிட்னி ஸ்பியர்ஸ். தனது திருமணம், விவாகரத்து, குழந்தை பராமரிப்பு தொடர்பில் அவர் பெரும் மன உளைச்சலுக்கு உள்ளானார். இதனையடுத்து மனநலம் மையத்தில் அனுமதிக்கப்பட்டு அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டது. இந்நிலையில், இது தொடர்பான வழக்கின் தீர்ப்பை கடந்த 2008ஆம் ஆண்டு வழங்கிய நீதிமன்றம், தந்தை ஜேமி ஸ்பியர்ஸ் மற்றும் வழக்கறிஞர் ஆண்ட்ரூ வாலட் ஆகியோரின் கட்டுப்பாட்டில் பிரிட்னி ஸ்பியர்ஸ் இருக்க வேண்டும் என உத்தரவிட்டது.

தனது பொருளாதாரம் சார்ந்த, வாழ்க்கை சார்ந்த எந்தவொரு முடிவையும் எடுக்கும் உரிமை பிரிட்னி ஸ்பியர்ஸுக்கு மறுக்கப்பட்டது. கடந்த 13 ஆண்டுகளாகவே தனது வாழ்க்கை குறித்த எந்த முடிவையும் சுயமாக எடுக்க உரிமை இல்லாதவராக பிரிட்னி ஸ்பியர்ஸ் உள்ளார். பிரிட்னி ஸ்பியர்ஸுக்கு விதிக்கப்பட்டுள்ள இந்தக் கட்டுப்பாடுகளை திரும்பப் பெற வேண்டும் என்ற கோரிக்கை சமீபகாலமாக வலுபெற்றுள்ளன.

இந்நிலையிலேயே கட்டுப்பாடுகளை விடுவித்துக்கொள்வதாக பிரிட்னி ஸ்பியர்ஸின் தந்தை தெரிவித்துள்ளார்.



தென்கொரியாவில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஆரம்பமாகவுள்ள சர்வதேச கண்காட்சியை முன்னிட்டு தயார்படுத்தப்படும் பூங்காவை படத்தில் காணலாம்.




நாளைய தினம் விநாயக சதுர்த்தி கொண்டாடப்படுவதை முன்னிட்டு இந்தியாவின் டில்லியில் விநாயகர் சிலைகள் விற்பனைக்காக தயார்படுத்தப்படுகின்றன.



கினிய குடியரசின் கட்டுப்பாடு இராணுவ வசமாகியதையடுத்து பொதுமக்கள் வீதியில் இறங்கி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

## கவிஞர் புலமைப்பித்தன் காலமானார்



தமிழ்ச் சினிமாவில் எண்ணற்ற பாடல்களை எழுதிய கவிஞர் புலமைப்பித்தன் உடல்நலக்குறைவால் நேற்று காலமானார். கவிஞர் புலமைப்பித்தன் உடல்நலக்குறைவு காரணமாக சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்தார். இந்நிலையில், சிகிச்சை பலனின்றி தனது 85ஆவது வயதில் காலமானார்.

1935ஆம் ஆண்டு கோவை மாவட்டத்தில் பிறந்த புலமைப்பித்தன் தமிழ்ச் சினிமாவில் நூற்றுக்கும் மேற்பட்ட திரைப்படங்களில் பாடல்களை எழுதியுள்ளார்.

'குடியிருந்த கோயில்' திரைப்படத்தில் இடம்பெற்ற "நான் யார் நீ யார்" என்ற பாடலின் மூலம் தமிழ்ச் சினிமாவில் புகழ் பெறத் தொடங்கிய புலமைப்பித்தன் எண்ணற்ற பாடல்களை எழுதியுள்ளார். விஜய் நடிப்பில் அண்மையில் வெளியான 'தெறி' திரைப்படத்தில் இடம்பெற்ற வளைகாப்பு பாடலான தாய்மை வாழ்கென தூய செந்தமிழ் பாடலை புலமைப்பித்தன் எழுதியமை குறிப்பிடத்தக்கது. எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் அரசவைக் கவிஞராகவும், அதிமுக அவைத் தலைவராகவும் இருந்துள்ளார்.

எம்.ஜி.ஆர். நடித்த பெரும்பாலான திரைப்படங்களுக்கு புலமைப்பித்தன் பாடல்கள் எழுதினார். குடியிருந்த கோவில், அடிமைப்பெண், குமரிக்கோட்டம், நல்ல நேரம், உலகம் சுற்று வாலிபன் என 100இற்கும் மேற்பட்ட திரைப்படங்களுக்கு பாடல் எழுதியவர் கவிஞர் புலமைப்பித்தன். எம்.ஜி.ஆருடன் மிக நெருக்கமாக இருந்ததால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உருவானபோது அதன் நிறுவனத் தலைவர்களில் ஒருவராகவும் திகழ்ந்தார்.

அதிமுகவின் அவைத்தலைவராகவும் பதவி வகித்தவர் புலமைப்பித்தன். சிறந்த பாடலாசிரியருக்கான தமிழக அரசின் விருதை 4 முறை பெற்றுள்ளார் கவிஞர் புலமைப்பித்தன். எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்த காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர்களான பிரபாகரன், பேபி சுப்பிரமணியன் உள்ளிட்டோர் புலமைப்பித்தன் வீட்டில் தங்கி தங்களது பணிகளை செய்ததும் வரலாறு. புலமைப்பித்தனின் வீடு தங்களது இரண்டாவது தாயகம் என்றுதான் அந்நாளில் புலிகளின் தலைவர்கள் கூறியதை அவரே பல பேட்டிகளில் பதிவும் செய்திருக்கிறார்.

1964 இல் தொடங்கிய புலமைப்பித்தனின் திரைப்பயணம், நகைச்சுவை நடிகர் வடிவேலு நடித்த 'எலி' திரைப்படம்வரை இடைவிடாமல் தொடர்ந்தது. உடல்நலக்குறைவால் கடந்த மாத இறுதியில் சென்னை தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் புலமைப்பித்தன். நேற்றுக் காலை சிகிச்சை பலனின்றி புலமைப்பித்தன் காலமானார்.

## இந்தோனேசிய சிறையில் தீ விபத்து; 41 கைதிகள் பலி 70, பேர் காயம்



இந்தோனேசியாவின் டெங்கரங் நகரத்திலுள்ள சிறைச்சாலையில் நேற்று ஏற்பட்ட பாரிய தீ விபத்தில் 41 கைதிகள் உயிரிழந்துள்ளனர். மேலும், 70 பேர் வரை காயமடைந்துள்ளதாக அந்நாட்டுப் படையினர் அறிவித்துள்ளனர்.

டெங்கரங் சிறையில் போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின்கீழ் கைதுசெய்யப்படும் குற்றவாளிகள் அடைக்கப் பட்டிருந்தனர். இந்நிலையில், மின்கசிவால் திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

தீவிபத்துநேரிட்டகட்டடத்தொகுதியில்122 சிறைக்கைதிகள் அடைக்கப்பட்டிருந்தனர். தீ விபத்து குறித்து தகவலறிந்து விரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள் பல மணிநேரம் போராடி தீயை அணைத்தனர். இருந்தபோதிலும் இந்த தீ விபத்தில் சிக்கி கைதிகள் உட்பட 41 பேர் பலியாகினர். படுகாயமடைந்த மேலும் 70 பேருக்கு மருத்துவமனையில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது. அந்தக் கட்டிடத்திலிருந்த மற்ற கைதிகள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டனர்.

சிறைச்சாலையில் நேரிட்ட இந்தத் தீ விபத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகிறார்கள். நிலைமையை கட்டுக்குள் கொண்டுவர நூற்றுக்கணக்கான காவல்துறையினரும், பாதுகாப்புப் படையினரும் அங்கு குவிக்கப்பட்டுள்ளனர்.






# தென்னாபிரிக்காவுடன் எட்டு வருட கனவை நனவாக்கிய இலங்கை அணி

சுற்றுலா தென்னாபிரிக்க அணியுடனான 3 போட்டிகள்கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரை இலங்கை அணி 2-1 என்ற அடிப்படையில் கைப்பற்றி, 8 வருடங்களின் பின்னர் தென்னாபிரிக்க அணியுடன் ஒருநாள் சர்வதேச தொடரை கைப்பற்றி ரசிகர்களுக்கு விருந்து படைத்தது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியானது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 சர்வதேச தொடர்களில் விளையாடுவதற்காக இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் தொடரான 3 போட்டிகள்கொண்ட ஒருநாள் சர்வதேச தொடர் நேற்று முன்தினம் நிறைவுக்கு வந்தது.

முதல் போட்டியில் இலங்கை அணி வெற்றிபெற்ற நிலையில், பதிலுக்கு இரண்டாவது போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற தொடர் 1-1 என்ற அடிப்படையில் சமநிலையானது. அந்த அடிப்படையில் தொடர் வெற்றியாளரை தீர்மானிக்கின்ற மூன்றாவதும், இறுதியுமான ஒருநாள் சர்வதேச போட்டி நேற்று முன்தினம் கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் ஆரம்பமானது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 203 ஓட்டங்களை குவித்தது. 204 என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 30 ஓவர்கள் நிறைவில் 125 ஓட்டங்களுக்குள் சுருண்டது. தென்னாபிரிக்க அணியின் 8 விக்கெட்டுகள் இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர்களினால் வீழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குறித்த போட்டியில் இலங்கை அணி 78 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றதைத் தொடர்ந்து ஒருநாள் சர்வதேச தொடரை 2-1 என்ற அடிப்படையில் கைப்பற்றியதுடன், 8 வருடங்களின் பின்னர் தென்னாபிரிக்க அணியுடன் ஒருநாள் தொடரை கைப்பற்றியது. போட்டியின் ஆட்டநாயகனாக வேகப்பந்து வீச்சாளர் துஸ்மந்த சமீர தெரிவான அதேவேளை, தொடர் ஆட்டநாயகனாக துடுப்பாட்டத்தில் அசத்திய இளம் வீரர் சரித் அசலங்க தெரிவானார்.

இதேவேளை, தென்னாபிரிக்க அணியுடனான தொடரில் இலங்கை அணி இரண்டு போட்டிகளில் வெற்றிபெற்றதைத் தொடர்ந்து, ஐ.சி.சி. உலகக்கிண்ண சுப்பர் லீக் தொடரின் புள்ளிப்பட்டியலில் 42 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

தென்னாபிரிக்கா அணியுடனான இருதரப்பு கிரிக்கெட் தொடரின் அடுத்த தொடரான 3 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடர் நாளை கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் ஆரம்பமாகிறது.

## புள்ளிப்பட்டியலில் ஐந்தாமிடத்துக்கும் உயர்வு

| | TEAMS | M | W | L | T | N/R | PT |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ENGLAND | 15 | 9 | 5 | 0 | 1 | 95 |
| 2 | BANGLADESH | 12 | 8 | 4 | 0 | 0 | 80 |
| 3 | AUSTRALIA | 9 | 6 | 3 | 0 | 0 | 60 |
| 4 | INDIA | 9 | 5 | 4 | 0 | 0 | 49 |
| 5 | SRI LANKA | 15 | 4 | 10 | 0 | 1 | 42 |
| 6 | PAKISTAN | 9 | 4 | 5 | 0 | 0 | 40 |
| 7 | WEST INDIES | 9 | 4 | 5 | 0 | 0 | 40 |
| 8 | IRELAND | 12 | 3 | 8 | 0 | 1 | 35 |
| 9 | SOUTH AFRICA | 9 | 3 | 5 | 0 | 1 | 34 |
| 10 | NEW ZEALAND | 3 | 3 | 0 | 0 | 0 | 30 |
| 11 | AFGHANISTAN | 3 | 3 | 0 | 0 | 0 | 30 |
| 12 | NETHERLANDS | 3 | 2 | 1 | 0 | 0 | 20 |
| 13 | ZIMBABWE | 6 | 1 | 5 | 0 | 0 | 10 |

# முதலிடத்திற்கு முன்னேறிய சமீர



தென்னாபிரிக்க அணியுடனான மூன்றாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் 2 விக்கெட்களை வீழ்த்திய இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் துஸ்மந்த சமீர, இந்த ஆண்டில் ஒருநாள் சர்வதேச போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர்கள் பட்டியலில் முதல் இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

தென்னாபிரிக்க அணியுடனான இரண்டாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் 2 விக்கெட்டுகளை வீழ்த்திய துஸ்மந்த சமீர, இந்த ஆண்டில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர்கள் பட்டியலில் முதல் இடத்திலிருந்த பங்களாதேஷ் அணியின் வேகப்பந்து வீச்சாளர் முஸ்தபிசுர் ரஹ்மானை சமப்படுத்தி இருந்த நிலையில், தென்னாபிரிக்க அணியுடன் நேற்று முன்தினம் நிறைவுக்குவந்த மூன்றாவது போட்டியில் 2 விக்கெட்டுகளை வீழ்த்தியதன் மூலம் தற்போது 20 விக்கெட்டுகளுடன் முதல் இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

இவர் 14 போட்டிகளில் இவ்வாறு 20 விக்கெட்டுகளை வீழ்த்தி முதல் இடத்தில் காணப்படுகிறார். இவருக்கு அடுத்ததாக பங்களாதேஷ் அணியின் வேகப்பந்து வீச்சாளர் முஸ்தபிசுர் ரஹ்மான் 18 விக்கெட்டுகளை வீழ்த்தி இரண்டாம் இடத்தில் காணப்படுகிறார்.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# சீனாவை வீழ்த்தியது ஜப்பான்



பீபா உலகக்கிண்ண உதைபந்தாட்ட தகுதிகாண் போட்டியில் சீனாவை எதிர்த்து விளையாடிய ஜப்பான் 1-0 கோல் கணக்கில் வெற்றிபெற்றது. முன்னதாக அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் சீனா 3-0 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தது. சீனா விளையாடிய இரண்டு போட்டிகளிலும் தோல்வியடைந்தது.

ஓமானுக்கு எதிரான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்த ஜப்பான் முதல் வெற்றியைப் பதிவுசெய்தது. 20 வயதான ஃபார்வர்ட் குபோ டேக்ஃபுசா 22ஆவது நிமிடத்தில் பெனால்டி பகுதிக்குள் புகுந்தார். ஆனால், அவர் அடித்த பந்து கோல் கம்பத்தில் பட்டு திரும்பியது. ஜூன்யா இடோ வலது பக்கமாக ஓடியபோது, ஒசாகோ உள்ளே இருப்பதைக் கண்டு பந்தைக் கொடுத்தார். அவர் அற்புதமான வெற்றி கோலை அடித்தார்.

ஜப்பானின் தலைமைப் பயிற்சியாளர் ஹாஜிமே மோரியாசு தனது அணியை மீண்டும் பாதையில் கொண்டுவருவதில் மகிழ்ச்சியடைகிறேன் என்று கூறினார்.

“நாங்கள் மிகவும் கடினமாக உழைத்தோம். முதல் போட்டியை விட உடற்பயிற்சி நிலைமைகள் மிகவும் சிறப்பாக இருப்பதை என்னால் பார்க்க முடிகிறது. எங்கள் ஆக்ரோஷமான பாணி சீனாவை தற்காப்புக்காக விளையாட கட்டாயப்படுத்தியது. அது சீனர்கள் விளையாடும் முறை அல்ல. இரண்டாம் பாதியில் சீனர்கள் தங்கள் தீவிரத்தை உயர்த்துவார்கள் என்று எனக்குத் தெரியும். அவர்கள் அதிக வீரர்களை முன் வரிசையில் வைத்தார்கள். நாங்கள் அதை நன்றாக நிர்வகித்தோம்’’ என்று மோரியாசு கூறினார்.

செவ்வாயன்று மற்றய இடங்களில் நடந்த போட்டிகளில் அவுஸ்திரேலியா வியட்நாமை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. ஓமானுக்கு எதிரான போட்டியில் சவூதி அரேபியா 1-0 என்ற கணக்கில் வெற்றிபெற்றது.



இன்று இத்தாலி வீரருடன் பலப்பரீட்சை

# பன்னிரண்டாவது முறையாக காலிறுதிக்குள் நுழைந்த ஜோகோவிச்

அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரில் செர்பிய நாட்டு வீரர் நோவக் ஜோகோவிச் 12ஆவது முறையாக காலிறுதி சுற்றுக்கு தகுதிபெற்ற நிலையில் இன்று காலிறுதிப் போட்டியில் இத்தாலி வீரர் பெரேட்டினியை எதிர்கொள்கிறார்.

‘கிராண்ட்ஸ்லாம்’ அந்தஸ்துபெற்ற அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடர் தற்சமயம் நியூயோர்க்கில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு ‘ரவுண்ட் ஒவ் 16’ சுற்று ஆட்டத்தில் உலகின் முதல்நிலை வீரரும், 20 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவருமான நோவக் ஜோகோவிச், வைல்ட் கார்ட் மூலம் வாய்ப்பு பெற்ற 99ஆம் நிலை வீரரான அமெரிக்காவின் 20 வயதான ஜென்சன் புரூக்பியை எதிர்கொண்டார்.

முதல் செட்டை ஜென்சன் புரூக்பி 29 நிமிடத்தில் தனதாக்கி அசத்தினார். ஆனால், அதன்பிறகு அவர் ஜோகோவிச்சின் ஆக்ரோஷமான ஆட்டத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் தடுமாறினார். 2 மணி 58 நிமிடம் நடைபெற்ற இந்த மோதலில் ஜோகோவிச் 1-6, 6-3, 6-2, 6-2 என்ற செட் கணக்கில் ஜென்சன் புரூக்பியை வீழ்த்தி 12ஆவது முறையாக காலிறுதிக்கு முன்னேறினார். காலிறுதியில் ஜோகோவிச், எட்டாம் நிலை வீரரான இத்தாலி நாட்டைச் சேர்ந்த பெரேட்டினியை இன்று எதிர்கொள்கிறார்.

## ஐ.சி.சி. T20 உலகக்கிண்ணம் 2021

# வெள்ளிக்கிழமைக்குள் இலங்கை குழாம் அறிவிப்பு



ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடருக்கான இலங்கை அணியின் குழாம் எதிர்வரும் வெள்ளிக் கிழமைக்குள் அறிவிக்கப்படவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆஷ்லி டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஏழாவது ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரானது எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 17ஆம் திகதிமுதல் ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஓமன் ஆகிய நாடுகளில் ஆரம்பமாகிறது. குறித்த தொடரில் பங்கேற்கின்ற அணிகள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 10ஆம் திகதிக்குள், அதாவது எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்குள் தங்களுடைய குழாம்களை அறிவிக்க வேண்டும் என சர்வதேச கிரிக்கெட் பேரவை காலக்கேடு விதித்திருந்தது.

இந்நிலையிலேயே 10ஆம் திகதிக்குள் இலங்கை குழாம் அறிவிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 15 பேரடங்கிய இலங்கை அணியின் குழாம் அறிவிக்கப்படவுள்ளதுடன், 4 வீரர்கள் மேலதிக வீரர்களாக இணைக்கப்படவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆஷ்லி டி சில்வா தெரிவித்துள்ளார்.

அறிவிக்கப்படும் குழாமில் ஏதாவது மாற்றங்கள் இருப்பின் எதிர்வரும் ஒக்டோபர் 10ஆம் திகதிக்கு முன்னர் மாற்றங்களை மேற்கொள்ள முடியும். 2021ஆம் ஆண்டுக்கான ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரில் இலங்கை அணி தங்களுடைய முதல் போட்டியில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 18ஆம் திகதி நமீபியா அணியை எதிர்கொள்ளவுள்ளது.

# இலங்கையில் நான்கு சர்வதேச அணிகளின் பங்கேற்புடன் உதைபந்து தொடர்

‘பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கிண்ணம்’ என்ற பெயரில் முதல் தடவையாக நான்கு நாடுகள் பங்கேற்கும் சர்வதேச உதைபந்து தொடரொன்றை நடத்த இலங்கை உதைபந்து சம்மேளனம் நடவடிக்கை எடுத்துள்ளது. குறித்த தொடரில் இலங்கை, மாலைதீவு, பங்களாதேஷ், சீசெல்ஸ் ஆகிய 4 நாடுகள் பங்கேற்கவுள்ளன. சம்பியனாகும் அணிக்கு ரூ. 5 ஆயிரம் அமெரிக்க டொலர் பணப்பரிசாக வழங்கப்படவுள்ளது.

இப்போட்டித் தொடரில் பங்கேற்பதாக மூன்று வெளிநாடுகளும் (மாலைதீவு, பங்களாதேஷ், சீசெல்ஸ்) உறுதியளித்துள்ளன. சகல போட்டிகளும் கொழும்பு குதிரைப் பந்தயத்திடலில் நடத்தப்படவுள்ளதுடன், நவம்பர் மாதத்தின் 8ஆம், 11ஆம், 14ஆம் மற்றும் 17ஆம் திகதிகளில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அதாவது, மாலைதீவில் நடைபெறவுள்ள தெற்காசிய உதைபந்து தொடர் நிறைவடைந்து மூன்று வார காலத்துக்குப் பின்னர் இப்போட்டித் தொடர் ஆரம்பமாகும்.

சுகாதார வழிகாட்டல்களுக்கமைவாக இப்போட்டித் தொடரில் பங்கேற்கும் அனைவரும் ‘பயோ பபிள்’ முறையில் ஈடுபடுத்தப்பட்டு இப்போட்டித் தொடர் நடத்தப்படவுள்ளதாக இலங்கை உதைபந்து சம்மேளனம் தெரிவித்துள்ளது.

FOOTBALL SRI LANKA

# தங்கம், வெண்கல பதக்கங்களுடன் நாட்டை வந்தடைந்த டோக்கியோ பராலிம்பிக் சம்பியன்கள்



டோக்கியோ விமான நிலையத்தில்...









கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தபோது...




விமானத்தினுள் தங்க மகனுக்கு கேக் வெட்டி கொண்டாடியபோது...




பதக்கங்கள் வென்ற இருவருக்கும் இலங்கை வாகன இறக்குமதியாளர் சங்கத்தினால் ஜப்பானில் இரு கார்கள் பரிசாக வழங்கப்பட்டபோது...



தங்கம், வெண்கலம் வென்ற வீரர்களுக்கு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸினால் அன்பளிப்பு வழங்கப்பட்டபோது...

